JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

Volume 15 | Issue 04 | June 2024 | Mohan C. Lazarus |
Annual Subscription ₹ 100 | Single Copy ₹ 10



உனக்குக் கிடைக்கும்
தருணத்தைப் பயன்படுத்தினால்

## தடைகளைத் தாண்டலாம்!

# வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், **9750955547** என்ற எண்ணிற்கு **SMS அல்லது Whatsapp** மூலமாகவோ தெரியப்படுத்துங்கள்.

## உள்ளே...


08


16


24


30

**30,000 வாலிபர்கள்**
கையில் தவழும்
வாலிபர் உலகம் பத்திரிக்கை
உங்கள் கையில் உள்ளதா?


## சந்தா விவரம்

தனிப்பிரதி ₹ 10/-

ஆண்டு சந்தா ₹ 100/-

ஆயுள் சந்தா ₹ 1000/-













அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். **youth.jesusredeems.com** என்ற **website** மூலமாக ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்.

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.
**Phone: 04639-353333 | Cell:9750955547**
**E-mail: youth@jesusredeems.org**
**www.jesusredeems.com | youth.jesusredeems.com**

தலைவாசல்



# தடைகளைத் தாண்டு!

பிரியமான வாலிப மகளே(னே)! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!
விடுமுறை நாட்களை சந்தோஷமாக கழித்தீர்களா? விடுமுறை முடிந்து பள்ளி / கல்லூரிக்குப் போக ஆயத்தமாகிவிட்டீர்களா? அடுத்தக் கல்வியாண்டில் அடி எடுத்து வைக்கும் உங்கள் அனைவருக்காகவும் நாங்கள் ஜெபித்து வருகிறோம். கர்த்தர் உங்களோடு கூட இருந்து காத்து நடத்துவார்.
இந்த மாதம் "தடைகளைத் தாண்டிச் செல்" என்ற தலைப்பில் நாம் அநேக காரியங்களைப் பார்க்கப் போகிறோம்.

## "தடைகளை நீக்கிப் போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்து போகிறார்!"

இன்றைக்கும் சாதிக்க வேண்டும், சரித்திரம் படைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் பலர் முன்னேறிச் செல்லும் வேளையில், ஒருசில தடைகள் வந்தவுடன் சோர்ந்து போய் முடங்கி விடுகிறார்கள். இன்னும் பலர் தங்களுக்கு பிரச்சனையே வரக்கூடாது என்று யோசிக்கிறார்கள். அதுபோல தான் ஜோதி தன்னுடைய வாழ்க்கையில் பல தடைகளினிமித்தம் முன்னேற வாய்ப்பும், வழியுமின்றி இருந்தார். ஆனால் அத்தடைகளைத் தாண்டி, ஏழ்மை என்னும் இருள் தன்னையும் தன்னுடைய திறமையையும் மூடிவிடாதபடி எழும்பினார். தடை தாண்டும் ஓட்டப் போட்டியில் (Hurdling) பல சாதனைகளை செய்து, 9 மாதங்களில் 9 முறை National Record Breakஐ முறியடித்து, இந்தியாவிலுள்ள அனைவராலும் புகழ்ந்து பேசப்பட்டவர் தான் ஜோதி. 2024 Paris Olympicsல் Jyothi தங்கம் வெல்வார் என்று இந்தியா எதிர்பார்க்கிறது.

வாலிபனே! இன்றைக்கு உன்னுடைய வாழ்க்கையிலும் சத்துரு பல தடைகள் மற்றும் சோர்வுகளைக் கொண்டு வந்து உன்னை ஆழ்த்தவும், அழிக்கவும் திட்டம் கொண்டு வந்தாலும், உன்னோடு இருந்து உனக்காக யுத்தம் செய்ய ஒருவர் உண்டு. உன்னுடைய தடைகள் உனக்கு மலை போல தெரியலாம். ஆனால் உன்னோடு இருக்கும் தேவன், தடைகளை நீக்கிப் போட்டு உனக்கு முன்பாக நடந்து போகிறார். எனவே அவரை சார்ந்து நீ நிற்கும் போது அவர் உனக்காக வழக்காடுவார், பரிந்து பேசுவார், யுத்தம் பண்ணுவார், தடைகளை நீக்குவார்.



அவர் பரந்து விரிந்த செங்கடலைப் பிளந்தவர்!

பாய்ந்து ஓடிய யோர்தான் நதியை நிறுத்தியவர்!

பலத்த எரிகோ கோட்டையை தரை மட்டமாகியவர்!

கன்மலையைப் பிளந்து தண்ணீரை ஊற்றியவர்!

இப்படி அதிசயங்களையும், அற்புதங்களையும் செய்த தேவன், உங்கள் வாழ்க்கையிலும் செய்து, உங்களையும் எழுப்பி தொடர்ந்து ஓடச் செய்வார்; எழுப்புதல் பணியில் உன்னை முன் நின்று செயல்பட வைப்பார்.

உன் இயலாமையில் அவர் செயல்படுவார், அவருடைய கரம் உன்னை விட்டு விலகாதிருக்கும். மலைகளை பெயர்க்கிறவர் உன்னோடு இருக்கிறார். அவர் உன்னைக் கொண்டு கிரகிக்க முடியாத காரியங்களை செய்வார். தேவ கிருபை உங்களனைவரோடுங்கூட இருப்பதாக!

கிறிஸ்துவின் பணியில்
**மோகன் சி. லாசரஸ்**

சாட்சி தொகுப்பு: பெனிட்டா

# குடும்பத்தின் இரட்சிப்பில் தேவ சித்தம்





**ஹாய், என் பெயர் ஊர்வசி. மற்றக் குழந்தைகளைப் போல் என் குழந்தைப் பருவம் எனக்கு சந்தோஷமானதாக அமையவில்லை. எனக்கு தாய் கிடையாது. எனக்கு ஒரு அண்ணன் மற்றுமொரு தம்பி இருக்கிறார்கள். என் அப்பா ஒரு குடிகாரர். நான் சந்தோஷமாக சிரித்து பேசினாலோ, மற்ற பிள்ளைகளோடு கூடி விளையாடினாலோ அவருக்குப் பிடிக்காது.**



இந்நிலையில், நான் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தபோது, இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டு அவரை என் வாழ்க்கையின் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டேன். அந்நாள் முதல் என் வாழ்வில் போராட்டங்கள் துவங்கின. நான் இயேசுவை ஏற்றுக்கொண்டதால் என் தந்தை என் வாழ்க்கையை முடித்துவிட எண்ணினார்.



என் அண்ணனுக்கு அவரே மதுபானத்தை தினமும் வாங்கிக் கொடுப்பார். இருவரும் முழுமையாக குடித்து விட்டு என்னை மிகவும் மோசமாக அடிப்பார்கள். தினமும் கண்மூடித்தனமாக அடிப்பார்கள். ஒவ்வொரு நாளும் என் முகத்தில், கரங்களில் காயத்தோடு தான் கல்லூரிக்கு செல்வேன். அனைவரும் என்னை கேலி செய்து சிரிப்பார்கள். இப்படியே நாட்கள் மாதங்களாக உருண்டோடின. தினமும் அடி, உதை வாங்கி சரீரம் முழுவதும் காயத்தோடும், மனதில் மிகுந்த வேதனையோடும் வாழ்ந்து வந்தேன்.



ஆனால் இவையனைத்தும் இயேசுவின் மீதிருந்த என் அன்பை அசைக்கவில்லை, நான், வீட்டைவிட்டு வெளியேறாமல் அங்கேயே கிறிஸ்தவளாக வாழ்கிறேன் என்பதை உணர்ந்த என் தகப்பனார், என்னை வெளியேற்ற வேறு புதிய

முறையைக் கையாண்டார். என் தகப்பனாரும், சகோதரனும் குடித்துவிட்டு மிகவும் மோசமாக என்னை அடிப்பார்கள். பிறகு அக்கம்பக்கம் உள்ளவர்களை அழைத்து, ''இவள் ஒரு விபச்சாரி, விபச்சாரத்தில் ஈடுபடுகிறாள்'' என்று அனைவரிடமும் சொல்லி என்னை தவறாக நடத்தினார்கள். அந்த வேதனையை விவரிக்க வார்த்தைகள் இல்லை. அத்தனை உபத்திரவங்களுக்குள்ளானேன்.



என் குடும்பத்தினர் அனைவரும் வேற்று மதத்தினராய் இருந்த சூழ்நிலையில் நான் மட்டும் இயேசுவை




ஏற்றுக் கொண்டதால் குடும்பத்தின் கௌரவம் பாதிக்கப்படும் என்று எண்ணி, என்னை மிகவும் அவமானப்படுத்தி, வீட்டை விட்டு வெளியேற்ற என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவ்வளவு காரியங்களையும் என் தகப்பனும் அண்ணனும் செய்தனர். என் தம்பி மட்டும் என் மீது பரிதாபப்பட்டு எனக்கு ஆதரவாக இருந்தான். அனைவரும் என் தகப்பனாரின் வார்த்தைகளை நம்பினார்கள். நானும் என் தம்பியும் சொல்லும் எந்த வார்த்தைகளையும் யாரும் மதிக்கவுமில்லை, நம்பவுமில்லை.

இப்படி சூழ்நிலைகள் எங்களுக்கு எதிராக இருந்தாலும், நாங்கள் நம்பிக்கை இழக்காமல் ஜெபித்துக் கொண்டேயிருந்தோம். ஆனால் ஒருநாள் என் அப்பாவும், என் அண்ணனும் என்னை பலமணி நேரம் அடித்துவிட்டு நள்ளிரவு 12 மணி அளவில் அருகில் உள்ள காவல் நிலையத்தில் மிகவும் மோசமான நிலையில் என்னை விட்டதுமல்லாமல், என் தகப்பனார், ''இவள் ஒரு விபச்சாரி இங்கேயே இவளை வைத்துக் கொள்ளுங்கள், என்ன வேண்டுமானாலும் இவளோடு செய்து கொள்ளுங்கள்'' என்று காவலர்களிடம் கூறி என்னை

**"ஆனால் இவையனைத்தும் இயேசுவின் மீதிருந்த என் அன்பை அசைக்கவில்லை"**

**"நாங்கள் நம்பிக்கை இழக்காமல் ஜெபித்துக் கொண்டேயிருந்தோம்."**

தனியே அந்த காவல் நிலையத்தில் விட்டு விட்டுச் சென்றார். என்னைப் பெற்ற தகப்பனே இவ்வளவு இழிவாக என்னை நடத்துவதைக் கண்டு நான் முற்றிலுமாக நொறுங்கிப் போனேன். என் இருதயம் சுக்குநூறாக உடைந்தது. இயேசு என் வாழ்க்கையில் இருந்ததால், அவருக்காக இவ்வளவு அடி, உதை, வீண் பழிச்சொல் அவமானங்கள் அடைந்தேன். ஆனால் காவல்நிலையத்தில் தனித்து விடப்பட்டபோது முன்பு இருந்த நம்பிக்கையும், தைரியமும் இல்லை. என் இருதயம் தளர்ந்து போனது. ஆனாலும் தேவன் மேல் இருந்த விசுவாசம்





மாத்திரம் குறையவில்லை. தேவன் என் வாழ்க்கைக்காக ஒரு அழகான திட்டம் வைத்திருக்கிறார் என்பதை மாத்திரம் அறிந்திருந்தேன்.

அந்த நள்ளிரவில் என் தம்பி காவல் நிலையத்திற்கு ஓடி வந்து அங்கிருந்த அனேகரை உதவிக்காக அழைத்தான். யாரும் உதவ முன்வரவில்லை. காவலர்களிடம், ‘‘என் அக்கா ஒன்றும் செய்யவில்லை அவள் விபச்சாரியல்ல, அவள் ஒரு பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றி வருகிறாள்’’ என்று அவன் எவ்வளவோ விவரித்தும், யாரும் எங்களை நம்பவில்லை. அந்த நேரத்தில்தான் நான், ‘‘ஏன் இயேசுவிற்காக இவ்வளவு பெரிய விலைக்கிரயம் செலுத்துகிறோம்’’ என்று யோசித்தேன். காவல் நிலையத்திலிருந்து ஒருவழியாக வெளியேறி தெரிந்தவர்கள் வீட்டில் தஞ்சம் புகுந்தோம். இந்நிலையில் ஒருநாள் என் தம்பி, நான் திருமணம்



செய்து கொண்டால் எனக்கு நிரந்தரமாக தங்குவதற்கு வீடும், என்னைப் பார்த்துக் கொள்வதற்கு கணவரும் இருப்பார் என்று எண்ணி, எனக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பினான். ஆனால் வேதத்திற்கு மாறாக வேறு மதத்தைச் சேர்ந்த ஒருவரை திருமணம் செய்து கொள்வதில் எனக்கு விருப்பமில்லை. அதே சமயம் கிறிஸ்தவ வாலிபர் யாரையும் எனக்குத் தெரியாது. சூழ்நிலைகள் நான் எதிர்பார்த்ததைப் போல் அமையவில்லை. எனவே என்னைப் பற்றியும், என் குடும்பத்தைப் பற்றியும் நன்றாக அறிந்த, என் தம்பியின் நண்பர் என்னை திருமணம் செய்து கொள்ள முன்வந்தார்.

திருமணமான முதல் நாளே நான் அவருக்கு இயேசுவைக் குறித்து சொல்ல அவரும் இயேசுவை ஏற்றுக் கொண்டார். நாங்கள் இருவரும் கணவன் மனைவியாக இணைந்து சபைக்கு சென்று இயேசுவை ஆராதித்தோம். இயேசுவின் அன்பை ருசித்த என் கணவர் என் அண்ணனுக்கு இயேசுவைக் குறித்து சொன்னார். சில நாட்கள் கழித்து என் அண்ணன் இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். நான், பல ஆண்டுகளாக ஜெபித்த ஜெபத்திற்கு தேவன் பதிலளித்தார்.

அதன்பின் என் கணவரும், சகோதரனும் இணைந்து என் அப்பாவிற்கு சுவிசேஷம் அறிவித்தார்கள். என்ன ஆச்சரியம் அப்பாவும் தன் இருதயத்தை திறந்து இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். தேவன் என் கண்ணீருக்கு பதிலளித்து விட்டார். என்னால் விவரிக்க முடியாத சந்தோஷத்தால் கர்த்தர் என்னை நிரப்பிய நாளது. இப்பொழுது என் அப்பா, தன் குடிப்பழக்கத்தை விட்டு விட்டு ஊழியம் செய்கிறார். என் வாழ்க்கையின் சிறந்த அற்புதமாக நான் இதைக் கருதுகிறேன். ஏனென்றால். கிறிஸ்தவளாக மாறினதற்காக என்னை அடித்து துன்பப்படுத்தின என் அப்பா இன்று கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவருக்காக ஊழியம் செய்வார் என்று நான் கனவிலும் நினைத்ததில்லை. ஆனால் தேவன் அந்த பெரிய அற்புதத்தை என் வாழ்க்கையில் செய்தார்.



என்னையும் ஒரு கருவியாக பயன்படுத்தி என் குடும்பத்தை இரட்சித்த தேவனுக்கு எல்லா மகிமையையும் செலுத்துகிறேன்.

**இதை வாசிக்கும் வாலிபர்களே, இயேசுவிற்காக வைராக்கியமாக நின்றதால், ஊர்வசி பல பாடுகளையும், அவமானங்களையும் சந்தித்தாள். திக்கற்ற நிலையில், இயேசுவும் கூட அவளின் ஜெபத்திற்கு உடனே பதில் தராமல் மௌனமாக இருந்ததைப் போல் உணர்ந்தாள். ஒருவேளை நீங்களும் இதே நிலையில் இயேசுவிற்காக பாடனுபவித்து, பல ஆண்டுகளாக உங்கள் குடும்பத்தினரின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொண்டிருக்கலாம். ஜெபித்து சோர்ந்தும் போயிருக்கலாம். உங்கள் நம்பிக்கையை தளரவிடாதீர்கள். உங்கள் காத்திருப்பிற்கான பலனை வெகு விரைவில் நீங்கள் பார்ப்பீர்கள். மனம் தளராமல் விசுவாசத்தைப் பிடித்துக் கொண்டு தொடர்ந்து ஜெபியுங்கள். விரைவில் அற்புதத்தைப் பார்ப்பீர்கள்.**

புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

வேதாகமத்திலுள்ள ஜெபிக்கும் மக்களைக் குறித்த கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. அவர்கள் யார் என்பதையும், எதற்காக ஜெபித்தார்கள் என்பதையும் பொருத்தி, சரியான விடையை வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.

## வினாக்கள்

| | |
|---|---|
| 1. வறட்சிக்காக ஜெபித்தவன் | – ( a ) சிம்சோன் |
| 2. எதிரியின் மேல் ஜெயத்திற்காக ஜெபித்தவன் | – ( b ) மனாசே |
| 3. குடிக்க தண்ணீர்க்காய் ஜெபித்தவன் | – ( c ) மனோவா |
| 4. தன்னுடைய வீட்டின் ஆசீர்வாதத்திற்காய் ஜெபித்தவன் | – ( d ) ஆசா |
| 5. ஓர் ஆண்மகனுக்காய் ஜெபித்தவள் | – ( e ) யாக்கோபு |
| 6. குஷ்டரோகத்திலிருந்து தன் சகோதரியை சுகப்படுத்தும்படி ஜெபித்தவன் | – ( f ) எலிசா |
| 7. தன் சகோதரனிடமிருந்தும் காப்பாற்றும்படி ஜெபித்தவன் | – ( g ) தாவீது |
| 8. எருசலேமிற்கும் தன்னுடைய இராஜ்யத்திற்கும் திரும்பி செல்ல வேண்டுமென்று ஜெபித்தவன் | – ( h ) அன்னாள் |
| 9. சேனைகளுக்கெல்லாம் கண்மயக்கம் உண்டாகும்படி ஜெபித்தவன் | – ( I ) எலியா |
| 10. பிள்ளை வளர்ப்புக்கு வேண்டிய வழிநடத்துதல் கிடைக்கும்படி ஜெபித்தவன் | – ( j ) மோசே |

### கடந்த மாத விடைகள்

1. ஏவாள் (ஆதி. 3:20)
2. சாராள் (ஆதி. 17:16)
3. ரெபேக்காள் (ஆதி. 24:60,61)
4. தெபோராள் (நியா. 5:7)
5. அன்னாள் (1 சாமு. 2:19)
6. பத்சேபாள் (1 இராஜா. 2:19)
7. அத்தாலியாள் (2 இராஜா. 11:11)
8. தொற்காள் (அப். 9:36)
9. யோகெபேத் (எண். 26:59); (யாத். 2:2; 6:20)
10. நகோமி (ரூத் 1:20)




### கடந்த மாத வெற்றியாளர்:

சகோ. அருள்ராஜ், (கோவை)

அவர்களை வாழ்த்துகிறோம்.

பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.06.2024

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org

ஆலோசனை: அவி

# சோர்ந்து போகாமல் சார்ந்திரு!



**நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்க்கப்பட்டேன். ஆனால் என் வாலிப வயதில் எனது தாயையும் தந்தையும் இழந்து விட்டேன். தற்பொழுது நானும் என் தங்கையும் எனது பாட்டியுடன் வசித்து வருகிறோம். என் பெற்றோரின் மரணத்திற்குப் பிறகு பள்ளிப் படிப்பை தொடர முடியாமல், ஒரு கம்பெனியில் சேர்ந்து வேலை பார்த்து வருகிறேன். ஆனாலும் கர்த்தர் மேலுள்ள விசுவாசத்தை நான் விடவில்லை. இயேசு என்னையும் என் தங்கையையும் உயர்த்தி ஆசீர்வதிப்பார் என்ற நம்பிக்கையுண்டு. எனது தங்கை 8ம் வகுப்பு படிக்கிறாள். நான் எனது கம்பெனி நண்பர்களோடு சேர்ந்து பல பாவப் பழக்கங்களுக்கு அடிமையாகி விட்டேன். என்னால் அவைகளிலிருந்து விடுதலைப்பெற முடியவில்லை. "இயேசுவை ஆராதிக்கிற நான் பாவம் செய்கிறேனே" என்ற குற்றமனசாட்சி அடிக்கடி என்னை வாதிக்கின்றது. மேலும் நான் வேலை செய்யும் இடத்தில் என்னுடைய Manager அன்பாக பழகுவதால், வேறு வேலைக்கு செல்ல மனம் இல்லை. இந்த கம்பெனியில் இருப்பதால் பல பாவப் போராட்டங்களைச் சந்திக்கிறேன். மேலும் என்னுடைய Managerிடம் நான் பழகுவது தவறு என்று தெரிகிறது. ஆனால், அதை விடவும் விருப்பம் இல்லை. இப்படி பல பாவ வலைகளுக்குள் சிக்கியிருப்பதை போல உணர்கிறேன். ஆனால் எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒரு பக்கம் பயமாகவும், மறுபக்கம் என்னை குறித்து வெறுப்பாகவும் இருக்கிறது. – ஏஞ்சல், காஞ்சிபுரம்.**

அன்பு தங்கை ஏஞ்சல், உங்களின் உள்ளான வேதனை, பெற்றோரின் இழப்பு, கைவிடப்பட்ட சூழ்நிலை, ஆதரவுக்கென்று யாரும் இல்லை என்ற வலி ஒரு பக்கம் இருக்க, மறுபக்கம் படிப்பை பாதியில் நிறுத்தியது, மேலும் வேலை செய்யும் இடத்தில் பாவப் பழக்கத்தில் சிக்கிய வேதனை, இவை எல்லாவற்றிற்கும் மேலாக **Manager**ரிடம் உள்ள தவறான **Relationship** உங்களை நாளுக்கு நாள் அழுத்திக் கொண்டிருப்பதை நன்கு உணர முடிகிறது.

ஏஞ்சல், தற்பொழுது உங்களுக்குள் ஏற்பட்டுள்ள பயமும், தடுமாற்றமும் தான் உங்களை நீங்கள் வெறுக்க காரணமாக இருக்கிறது. இத்தனை இழப்புகள் மத்தியிலும் உங்களை நடத்தி வந்த தேவன் இனியும் நடத்துவார். ஆனால் தற்பொழுது ஏற்பட்டுள்ள தடுமாற்றமும், தவறான உறவும் உங்கள் மனதிலுள்ள சமாதானத்தைக் கெடுத்து, பெரும் ஆபத்துக்குள் ஆழ்த்தி விடும் என்பதை மறக்க வேண்டாம்.

''**இதோ உலகத்தின் முடிவு பரியந்தமும் நான் உன்னோடு இருக்கிறேன்**'' என்று சொன்ன தேவன், உங்களை இதுவரை கைவிடவும் இல்லை, மறக்கவும் இல்லை. அவர் வாக்கு கொடுத்தபடி உங்களை நடத்திக் கொண்டு தான் இருக்கிறார்.

ஆனால் நீங்கள் தேவனை விட்டு பிரியும் போது, பல பாவ பழக்கங்களும், தவறான உறவும் உங்களை சூழ்ந்திருக்கிறதை உங்களால் உணர முடிகிறதா? என்பதை யோசியுங்கள்.

ஏஞ்சல், இந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து உங்களை விடுவித்து, உங்களுக்கு தேவன் வாக்கு கொடுத்தபடி உங்களை உயர்த்த அவரால் முடியும்.



அதற்கு நீங்கள் இயேசுவோடு இருக்க வேண்டும். நீங்கள் இயேசுவோடு இருந்தால் அவரும் உங்களோடு இருந்து, உங்கள் தடைகளை நீக்கி உங்களை இரட்சித்து, விடுவித்து, காத்து உயர்த்துவார்.

நீங்கள் ஒரு முக்கியமான நிலையில் உள்ளீர்கள், தவறு என்று தெரிந்தும் தொடர்ந்தால் அது ஆபத்தில் போய் முடியும். அதே நேரத்தில் தேவனை சார்ந்து அவர் சத்தத்துக்கு கீழ்படிந்தால் ஒரு சிறந்த வாழ்க்கையை வாழ முடியும்.

## DANGER தொடர்ந்தால் வரும் ஆபத்து DANGER

- இந்தப் பாவ பழக்கம் உங்களை நாளுக்கு நாள் அடிமையாக்கி, நீங்கள் அந்த பாவத்தில் மூழ்கி, நிரந்தரமாக அதற்கு அடிமையாக வாய்ப்பு உண்டு.
- Manager உடனான தவறான உறவின் நிமித்தம், உங்களின் Characterயை எல்லோரும் தவறாக பேசவும், மேலும் இதனால் உங்கள் வேலையே போகவும் வாய்ப்பு உண்டு.
- இதனால் உங்கள் வீட்டில் பிரச்சனையும், உங்களுக்கு மனஅழுத்தமும் உண்டாகும்.
- ஒரு தவறான Role Model என்று எல்லோரும் உங்களை பேச நேரிடும்.
- வீட்டிலும் நிம்மதி இல்லாமல், பாவ பிரச்சனையோடு, வேலையில் ஏற்பட்ட அவமானத்தோடு, மனமுறிவடைந்து தவறான தீர்மானம் எடுக்க வாய்ப்பு உண்டு.

## இதிலிருந்து வெளிவர நீங்கள் எடுக்க வேண்டிய முயற்சிகள்

- முதலில் தேவனை துக்கப்படுத்தும் எந்த பாவ செயலிலும் ஈடுபட மாட்டேன் என்று தீர்மானியுங்கள்.
- நீங்கள் அந்த பாவத்திற்கு விலகி ஓட முயற்சி செய்யும்போது, தேவன் கிருபை தருவார்.
- தேவையில்லாத நண்பர்களின் நட்புக்கு முற்றுப் புள்ளி வைக்க முயலுங்கள்.
- Managerரிடம் பழகுவது தவறு என்று உள்ளத்தில் ஆண்டவர் தெளிவாக பேசும் போது, அந்த உறவுக்கு ஓர் முற்றுப்புள்ளி வைக்க முயற்சி செய்யுங்கள்.
- ஏன்! வேறு வேலைக்கு சென்றால், நீங்கள் இந்த காரியங்களிலிருந்து விடுதலை பெற முடியும் என்றால், வேறு வேலை தேட முற்படுங்கள்.

இப்படி நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும், தேவனோடு உங்களின் உறவை புதுப்பிக்க முடியும்.

நீங்கள் மறுபடியும் எழும்ப முடியும், பரிசுத்தமாய் வாழ்ந்து உங்களுக்கு தேவன் வைத்திருக்கும் உயரத்தையும், நல்ல வாழ்க்கையையும் அடைய முடியும்.

**ஏஞ்சல், வேத்தில் யோசேப்பு என்கிற வாலிபனின் வாழ்க்கையில் பல போராட்டம், பிரச்சனை, இழப்பு, வேதனை என்று அவர் சோர்ந்து போனாலும், கர்த்தர் அவரோடு இருந்து அவரை பெலப்படுத்தி, அவர் எல்லா தடைகளையும் தாண்டிச் செல்ல உதவி செய்து யோசேப்பை உயர்த்தினார்.**

**அதே ஆண்டவர் உங்கள் வாழ்க்கையிலும், நீங்கள் அவரை சார்ந்து இருந்தால் நிச்சயம் உயர்த்துவார். நம்பிக்கையோடு செயல்படுங்கள். கர்த்தர் நிச்சயம் உதவி செய்வார்! ஜெயம் தருவார்!!**

முகப்பு செய்தி: சதீஷ்

# தடைகளைத் தாண்டிச் செல்!



**உலகில் வெற்றியை நோக்கி முன்னேறி சென்று கொண்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு விதத்தில் தடைகள் வந்து கொண்டுதான் இருக்கும். வரும் தடைகளைத் தாண்டிச் செல்பவர்களே தங்களுடைய வாழ்வில் வெற்றி பெறுகிறார்கள். ஒவ்வொரு வெற்றியாளனுக்கும் வரும் முதல் தடை என்னவெனில், அவனுடைய மனதுதான். மனம் நேர்மறையாக (positive) யோசித்தால் போதும் எதையும் துணிந்து செய்ய முடியும். ஆனால் மாறாக 'உன்னால் முடியாது, கஷ்டம்' என்று எதிர்மறையாக சிந்திக்கும் போது யாராலும் செயல்பட முடியாது. எனவே நம் வாழ்வில் இலக்கை நோக்கி முன்னேறி செல்லும் போது மனதளவில் வரும் தடைகளைத் தாண்டினாலே போதும் பாதி வெற்றியை பெற்று விடலாம்.**

எப்போதும் நம் இலக்கை நோக்கி முன்னேறும் போது நம்முடைய கவனம் அதன்மீது மட்டுமே இருக்க வேண்டும். மாறாக, தடைகளை நினைத்து கவலைபட்டால் இலக்கை நோக்கி செல்லும் பயணம் சிதறிப் போய் விடும். உதாரணமாக நீங்கள் பள்ளிப் படிப்பையோ அல்லது கல்லூரி படிப்பையோ முடித்து விட்டு உயர் படிப்பிற்காகவோ, வேலைக்காகவோ முயற்சி செய்து அதை அடைய முடியாமல் போய் இருந்தால், உங்கள் மனதை பக்குவப்படுத்தி முன்னேறி செல்லுங்கள், நீங்கள் கட்டாயம் வெற்றி பெறுவீர்கள். ஒருமுறை தாவீது யுத்தத்திற்கு சென்று திரும்புகையில் சிக்லாகில் அமலேக்கியர் வந்து அவனது உடைமைகளையும் அவனுக்கு உண்டான யாவற்றையும் கொள்ளையடித்து விட்டு சென்று விட்டனர். இதைக் கண்டு மனந்தளராமல் கர்த்தருக்குள் தன்னை திடப்படுத்தி கொண்டு, ஆண்டவர் சொன்ன வார்த்தையின்படி, **"அப்பொழுது தாவீதும் அவனோடிருந்த அறுநூறுபேரும் போனார்கள்"** (1 சாமு. 30:9). அவர்கள் பேசோர் ஆற்றண்டைக்கு வந்தபோது 200 பேர் நின்று போனார்கள்.



இதைக் கண்டு தாவீது மனந்தளராமல் நானூறு பேரோடுகூடத் தொடர்ந்து போனான். மேலும் 200 பேர் பேசோர் ஆற்றைக் கடக்க

மாட்டாமல் நின்று போனார்கள். இப்படி இலக்கை நோக்கி முன்னேறி செல்லும் போது தடை மேல் தடை வந்து கொண்டே இருந்தாலும், இவை எல்லாவற்றையும் கண்டு தாவீதின் மனம் சோர்ந்து போகவில்லை. கர்த்தர் சொன்ன வார்த்தையை விசுவாசித்து தொடர்ந்து தடைகளைத் தாண்டி முன்னேறிச் சென்றதினால், **“அவர்கள் கொள்ளையாடிக்கொண்டுபோன எல்லாவற்றிலும், சிறியதிலும், பெரியதிலும், குமாரரிலும், குமாரத்திகளிலும், ஒன்றும் குறைபடாமல், எல்லாவற்றையும் தாவீது திருப்பிக் கொண்டான்.”** (1 சாமு. 30:19). ஒருவேளை தாவீது தனக்கு எதிராய் இருந்த தடைகளைக் கண்டு சோர்ந்து போய் மனம் விடாய்த்துப் போயிருந்தால் கண்டிப்பாக இந்த யுத்தத்தில் வெற்றி பெற்றிருக்க முடியாது. பல தடைகளைத் தாண்டினால்தான் பிரம்மாண்டமான வெற்றிகளை பெற முடியும். தடைகளைக் கண்டு சோர்ந்து போனால் நம்மால் இலக்குகளை அடைய முடியாது.



உங்கள் முன்னே இருக்கும் இலக்குகளை நோக்கி ஒவ்வொருநாளும் முன்னேறி செல்லுங்கள், தடைகளைக் கண்டு சோர்ந்து போகாதிருங்கள். நீங்கள் எடுத்த காரியத்தில் வெற்றி பெற வேண்டுமானால் கடினமான உழைப்பும், முயற்சியும் கூடவே நம்பிக்கையும் மிகவும் அவசியம். எத்தனை தடைகள் வந்தாலும் அதைத் தாண்டி வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கை இருந்தால் மட்டுமே உங்கள் இலக்கை அடைய முடியும். எத்தனை பேர் எழும்பி உங்கள் இலக்குகளை தடுக்க முற்பட்டாலும் இடங்கொடாமல் முன்னேறி செல்லுங்கள்.

எருசலேமின் அலங்கத்தை நெகேமியா கட்ட ஆரம்பித்த போது எத்தனை தடைகள், மனப்போராட்டங்கள், பாடுகள், நிந்தனைகள், அவமானங்கள், எதிர்ப்புகள் வந்தபோதும் இவை எல்லாவற்றையும் தாண்டி அலங்கத்தை கட்டுகிற பணியில் மும்முரமாக இருந்தார். சன்பல்லாத்தும் தொபியாவும் ஆட்களை அனுப்பி எத்தனை முறை வேலையை தடுக்க முற்பட்டபோதும் நெகேமியா அதற்கு இடங்கொடுக்கவே இல்லை. **“...நான் பெரிய வேலையைச் செய்கிறேன், நான் வரக்கூடாது;...”** (நெகேமியா 6:3) என்று சொல்லி அனுப்பினார். இது ஒருபுறம் இருந்தாலும், மறுபுறம் உடனிருந்தவர்கள் வேலையில் ஆர்வம் குறைந்து, குறைபாடுகளை சொல்லி அலங்கத்தை கட்டுகிற வேலையில் ஈடுபடத் தயங்கினார்கள். இப்படி எல்லாப் பக்கத்திலும் நெகேமியாவிற்கு தடைகள் வந்த போதிலும், இவற்றைக் கண்டு சோர்ந்து போகாமல் தன்னுடைய அயராத உழைப்பாலும், முயற்சியாலும், நம்பிக்கையாலும் தேவன் மீது வைத்த வைராக்கியத்தினாலும் எருசலேமின் அலங்கத்தை வெற்றிகரமாகக் கட்டி முடித்தார். நெகேமியாவுடன் இருந்த மக்கள் பலவீனமானவர்கள், அவர்கள் அவனுக்கு தொந்தரவாகவும், மனமடிவு அடையும்படி முறுமுறுக்கிறவர்களாகவும் இருந்தார்கள். ஆனால் நெகேமியாவோ தன்னை அனுப்பின கர்த்தரை விசுவாசித்தார். எத்தனை தடைகள் வந்தாலும் **“தடைகளை நீக்கிப்போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்துபோகிறார்;...”** (மீகா 2:13) என்று ஆண்டவரை விசுவாசித்து தான் எடுத்த காரியத்தில் வெற்றி பெற்றார்.

**எனக்கன்பான வாலிபர்களே, உங்கள் இலக்கை நோக்கி நீங்கள் பயணிக்கும் போது அதில் பலத் தடைகள் வரத்தான் செய்யும். ஆனால் உங்களுடைய சிந்தனை, செயல் யாவும் உங்கள் இலக்கை நோக்கி இருக்குமானால், நீங்கள் கட்டாயம் அதில் வெற்றியைக் காண்பீர்கள். வெற்றியை நோக்கி செல்லும் போது தடைகள் வருவது இயல்புதான், அதை நினைத்து சோர்வுக்கும், கவலைக்கும் இடங்கொடுக்காமல் உங்கள் மனதைத் திடப்படுத்தி உங்களை அழைத்தவரும், தெரிந்து கொண்டவருமாகிய இயேசுவை விசுவாசியுங்கள். அவர் உங்கள் வாழ்வில் இருக்கும் எல்லாத் தடைகளையும் உடைத்து நீங்கள் அடைய வேண்டிய இலக்கை அடைய உதவி செய்வார்.**



# God who destroys Barriers!

# தடைகளை தகர்க்கும் தேவன்!

*"தடைகளை நீக்கிப்போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்துபோகிறார்; அவர்கள் தடைகளை நீக்கி, வாசலால் உட்பிரவேசித்துக் கடந்துபோவார்கள்; அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாகப் போவார், கர்த்தர் அவர்கள் முன்னணியில் நடந்துபோவார்" (மீகா 2:13).*



செய்தி: மோகன் சி. லாசரஸ்

அநேகருடைய வாழ்க்கையில், 'வியாபாரத்தில், திருமணக்காரியத்தில், வேலையில், கர்ப்பத்தின் கனி, பதவி உயர்வில், படிப்பில், ஆவிக்குரிய வாழ்வில், ஊழியக் காரியத்தில் என எதை எடுத்தாலும் தடை வருகிறது, காரியம் வாய்க்காமல் போகிறது' என்று பிரச்சனையோடு, துக்கத்தோடு, வேதனையோடு இருக்கிற மக்கள் தான் இன்றைக்கு அநேகம்.

உங்கள் வாழ்வில் கூட இன்றைக்கு இந்த மாதிரி ஒரு தடை இருக்கலாம். ஆனால் ஆண்டவர் உங்களைப் பார்த்து சொல்கிறார், ''என் மகனே(ளே), நான் தடைகளை நீக்கிப் போடுகிற கர்த்தர். இதுவரை காணப்பட்ட எல்லா தடைகளும் மாறப் போகிறது. இதுவரை தடைப்பட்ட காரியங்கள் எல்லாம் மாறி, உங்களுடைய காரியங்கள் வாய்க்கும் என்று கர்த்தர் வாக்குக் கொடுக்கிறார். தடைகளை நீக்கிப் போடுகிற கர்த்தர் உங்களுக்கு முன்னால் நடந்து போவார்.

ஊழியத்திற்காக உங்கள் மத்தியில் வரவேண்டும், உங்களை நேரடியாக பார்க்க வேண்டும் என்று பிரயாசப்பட்டேன். ஆனால் சாத்தானோ எங்களை தடைபடுத்தினான் என்று பவுல் சொல்கிறார்.

**"ஆகையால், நாங்கள் உங்களிடத்தில் வர இரண்டொருதரம் மனதாயிருந்தோம், பவுலாகிய நானே வர மனதாயிருந்தேன்; சாத்தானோ எங்களைத் தடைபண்ணினான்"** (1 தெச. 2:18). பவுல் அந்த பட்டணத்திற்கு சென்று ஊழியம் செய்யகூடாதபடி சாத்தான் தடைபடுத்தினான். எனக்கன்பானவர்களே, சாத்தானால் எப்போதுமே தடைபடுத்த முடியுமா? முடியாது. ஒரு நேரம் தடைபடுத்தினால் அடுத்த நேரம் கர்த்தர் தடைகளை உடைத்தெறிந்து வழிகளை உண்டாக்குவார்.

**"சகோதரரே, புறஜாதிகளான மற்றவர்களுக்குள்ளே நான் பலனை அடைந்ததுபோல உங்களுக்குள்ளும் சில பலனை அடையும்படிக்கு, உங்களிடத்தில் வர பலமுறை யோசனையாயிருந்தேன், ஆயினும் இதுவரைக்கும் எனக்குத் தடையுண்டாயிற்று என்று நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை"** (ரோமர் 1:13). ரோமாபுரியில் சென்று ஊழியம் செய்ய பவுலுக்குள் ஆசை இருந்தது. ஆனால் அதற்காகப் பிரயாசப்பட்டும் அது வாய்க்கவில்லை. அதே ரோமாபுரிக்கு ஆண்டவர்




பவுலைக் கொண்டு போய், அங்கு ஊழியம் செய்ய வைத்தார். அங்கு தான் பவுல் இரத்த சாட்சியாக மரித்தார். ஆண்டவர் ஏற்றவேளை வந்தபோது வழிதிறந்து பவுலைக் கொண்டு போனார்.

இன்றைக்கு சாத்தான் உங்களுக்கு தடையை உண்டுபண்ணலாம், ஆனால் கர்த்தர் அனுமதிக்காமல் அவனால் உங்களுக்கு தடையை கொண்டு வர முடியாது. சாத்தான் உங்களுக்கு தடை கொண்டு வர முயற்சித்தாலும், பிரயாசப்பட்டாலும் அவனால் முழுமையாக தடை பண்ண முடியாது. ஒருசில நேரங்களில் தற்காலிகமாக தடையை ஏற்படுத்தலாம். ஆனால் அந்த தடையை மாற்றி தேவன் உங்களுக்கு வழிகளை உண்டாக்கித் தருவார்.

ஒரு சகோதரிக்கு சாத்தான் 4 முறை கருச்சிதைவை ஏற்படுத்தி, கர்ப்பத்தின் ஆசீர்வாதத்தை தடுத்துக் கொண்டே இருந்தான். ஆவியானவர் சாத்தானின் திட்டத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தி, அதற்காக ஜெபம் பண்ணினபோது அந்த ஆவி வெளியேறிப் போனது. தடையை விலக்கி, கர்ப்பத்தின் ஆசீர்வாதத்தைக் கொடுத்து அவர்களை மகிழப்பண்ணினார். எப்பொழுதுமே சாத்தானால் தடையை உண்டுபண்ண முடியாது. தேவன் அந்த தடைகளை உடைத்தெறிவார். சாத்தான் கொண்டு வரக்கூடிய தடைகளை மாற்றி உங்களுக்கு காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். தொழில் காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். வேலைக்காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். திருமணக்காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.

தேவன் சில சமயங்களில் சில காரியங்களை செய்வதற்கு தாமதப்படுத்துவார். ஆனால் கர்த்தர் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடாது. கர்த்தர் ஒரு காரியத்தை தாமதம் செய்கிறார் என்று அறிந்தால் ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துங்கள். என்னுடைய பதவி உயர்வு தடைபட்டதற்காக ஸ்தோத்திரம். என் திருமணம் தடைபட்டதற்காக ஸ்தோத்திரம். எனக்கு வரவேண்டிய நன்மை தடுக்கப்பட்டதற்காக ஸ்தோத்திரம். உமக்கு தெரியாமல் என் வாழ்க்கையில் எதுவும் வராது என்று துதித்துப் பாருங்கள். தடைகள் மாறி விடும். சாத்தானால் தடை வந்தால், உபவாசத்தோடு அவனை எதிர்த்து ஜெபம் பண்ணுங்கள். அப்பொழுது அவனுடைய வல்லமைகள் நொறுங்கி விடும்.



உங்களுக்கு என்ன தடை? எதினால் இந்த தடை? ஏன் காரியம் வாய்க்கவில்லை? ஏன் இந்த தடை ஏற்படுகிறது? ஏன் பிள்ளைகள் காரியத்தில் இந்த நன்மை நடக்கவில்லை? கர்ப்பத்தின் ஆசீர்வாதம் ஏன் தடைபட்டுக் கொண்டே வருகிறது? என்று ஆண்டவருடைய பாதத்தில் காத்திருந்து ஜெபிக்கும்போது, கர்த்தர் தடைகளை மாற்றி காரியங்களை வாய்க்கப் பண்ணுவார்.

**அன்பான வாலிபர்களே! இன்றைக்கு நீங்கள் தடைகளைப் பார்த்து தடுமாறி நின்றுக் கொண்டிருக்கலாம். வியாபாரத்தில், தொழிலில், படிப்பில் தடையாக இருக்கிறதே என்று கலங்கி நிற்கலாம். நமக்கு ஒரு ஆண்டவர் இருக்கிறார்; அவர்தான் தடைகளை மாற்றுகிற தேவன். தடைகளை மாற்றி வழிகளை உண்டாக்கிக் கொடுக்கிற தேவன். தடைகளை மாற்றி காரியங்களை வாய்க்கப்பண்ணுகிற ஒரு தேவன். என் மகனே(ளே), நான் தடைகளை மாற்றி உனக்காக காரியங்களை வாய்க்கப்பண்ணுவேன்; வழியில்லாத இடத்தில் உனக்காக வழிகளை உண்டாக்குவேன். நீ பயப்படாதே என்று ஆண்டவர் உங்களோடு பேசுகிறார். அவரை நம்பி முன்னேறுங்கள் வெற்றி நிச்சயம்!**

தகவல்: காட்வின்

# TECH - 4

# கைபேசியை கையாளு!



**வாலிபர் உலகம் நேயர்களுக்கு இயேசு கிறிஸ்த்துவின் இனிதான நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கைபேசியை கையாளு என்னும் இந்த கட்டுரையின் மூலம் தொடர்ந்து நீங்கள் புதிய காரியங்களைக் கற்று வருகிறீர்கள் என்று கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன்.**

Excel App

கடந்த மாதம் Cloud storage என்றால் என்ன என்பது குறித்தும், Google Notes குறித்தும் அறிந்து கொண்டீர்கள். இந்த மாதமும் இந்த Cloud Storageன் பயன்பாட்டின் மூலம் இன்னும் என்னென்ன காரியங்கள் செய்யலாம் என்பதை அறியலாம்.

பொதுவாக அவசர அவசரமாக சில வேலைகளை நாம் செய்யும்போது அடிக்கடி நமக்கு ஏற்படுவது மறதி ஒன்றே. அதிகப்படியான வேலைப்பளுவின் நிமித்தமாகவும் அல்லது அதிகம் படிப்பதன் நிமித்தமாகவும் சில முக்கியமான காரியங்களை நாம் மறந்தே போய்விடுகிறோம்.

உங்களில் சிலர் கல்லூரிகளில் படிக்கலாம் அல்லது ஏதேனும் கணினி தொடர்பான நிறுவனங்களில் வேலை பார்க்கலாம். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அலுவலகத்திலோ அல்லது கல்லூரியிலோ படிப்பு சம்மந்தமாகவோ, வேலை தொடர்புடையதாகவோ உள்ள முக்கியமான காரியங்களை MICROSOFT WORD அல்லது MICROSOFT EXCEL ஆகியவற்றில் TYPE செய்து வைப்போம்.





Word Document App

சில அவசர சூழ்நிலைகளில் ஒரு இடத்தில் நாம் சேமித்து வைத்த தகவல்களை வேறு இடத்தில் பயன்படுத்த முடியாது. உதாரணத்திற்கு அலுவலகத்தில் ஏதேனும் ஒரு தகவலை WORD FILE ஆகவோ அல்லது POWER POINT SLIDE ஆகவோ சேமித்து வைத்து விட்டு வீட்டிற்கு வந்த பின் திடீரெனெ ஏதேனும் ஞாபகம் வந்தாலோ அல்லது அதில் மாற்றங்கள் செய்யவேண்டிய சூழ்நிலைகள் வந்தாலோ அதை செய்வதற்கு உண்டான வாய்ப்புகள் குறைவாகவே இருக்கும்.

பாதியில் விட்ட வேலையையும் மறுநாள் தான் துவங்க முடியும். இப்படிப்பட்ட சிக்கல்களை தீர்க்கத்தான் CLOUD STORAGE உதவுகிறது. GOOGLE DOCS என்னும் செயலி MICROSOFT WORDக்கு மாற்றாக நாம் தகவல்களை எழுத்துக்களாக சேமித்து வைக்க பயன்படுகிறது. கடிதங்கள், படிப்பதற்கான பாடங்கள், அலுவலக தகவல்கள் ஆகியவை அதில் நாம் TYPE செய்து வைக்கலாம்.

இந்த GOOGLE DOCS செயலியானது நாம் கொடுக்கும் தகவல்களை அப்படியே CLOUD STORAGEல் நம் MAIL ID மூலம் சேமித்து வைக்கும். நாம் எந்த இடத்தில் இருந்தாலும் நம்முடைய MAIL ID கொடுத்தாலே அங்கிருந்து தகவல்களை எடுக்க இயலும். இதைபோலவே MICROSOFT EXCELக்கு

மாற்றாக GOOGLE SHEETS, MICROSOFT POWER POINTக்கு மாற்றாக GOOGLE SLIDES என்று இப்படி GOOGLE APPகள் மூலம் நாம் CLOUD STOARAGEஐ எளிதில் இலவசமாக பயன்படுத்த முடியும்.




(குறிப்பு: MICROSOFT இணைய தளத்திலும் CLOUD STORAGE உண்டு. ஆனால் அதற்கு மாத சந்தா செலுத்தினால் மட்டுமே பயன்படுத்த முடியும். கூகுளில் 15GB STORAGE வரை இது இலவசம்). இதன் மூலம் வேலைக்கான அல்லது படிப்பதற்கான தடைகள் விலகி புதிய வழிகள் திறக்கும்.

**அன்பார்ந்த வாலிபர்களே உங்கள் வாழ்விலும் சில வேளைகளில் சில காரியங்கள் செய்ய அடிக்கடி தடைகள் ஏற்படலாம். மறதியின் நிமித்தமாக பொருத்தனைகள் நிறைவேற்ற முடியாமலோ அல்லது தீர்மானத்தில் உறுதியாய் நிலைதிருக்க முடியாமலோ காணப்படலாம். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் உங்களுக்கு அப்பாற்பட்டு வேறொருவரின் உதவி கட்டாயம் தேவைப்படும். நம்முடைய பரிசுத்த வேதாகமத்தில் கூட "இக்கட்டில் எங்களுக்கு உதவிசெய்யும், மனுஷனுடைய உதவி விருதா" என்று தாவீது சொல்கிறார் (சங்கீதம் 108:12).**

**இக்கட்டான சூழ்நிலைகளில் மனுஷருடைய உதவி பயனற்றது. கர்த்தரே நமக்கு உதவி செய்ய வல்லமை உள்ளவர். கர்த்தர் நமக்கு எப்படி உதவி செய்வார் என்னும் கேள்வி உங்களுக்கு உள்ளதா? பரிசுத்த ஆவியானவர் மூலம் நமக்கு உதவி செய்வார். "சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார், அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" (யோவான் 16:13). உங்களுக்கு தேவையான ஆலோசனையை ஆறுதலை ஏற்ற வேளைகளில் பரிசுத்த ஆவியானவரே தந்து உங்களை நடத்துவார். எனவே எல்லா சூழ்நிலைகளிலும் பரிசுத்த ஆவியானவரை சார்ந்து இருக்கப் பழகுங்கள். கர்த்தரின் ஆசீர்வாதத்தை எளிதில் பெற்றுக்கொள்ளுங்கள்.**

OK FRIENDS மீண்டும் அடுத்த tech கட்டுரையில் உங்களை சந்திக்கிறேன். அதுவரை தேவ கிருபை உங்களோடு இருப்பதாக.

காரைக்குடியில்...

எழுப்புதல் முழு இரவு ஜெபம்

நாள் : ஜூலை 19 (வெள்ளிக்கிழமை)
நேரம் : இரவு 9 மணி முதல்
அதிகாலை 4 மணி வரை


இடம்: தெய்வீக மகிமையின் ஆலயம் கோட்டையூர்,

செய்தியும் ஜெபமும் : சகோ. சதீஷ் குமார்

தொடர்புக்கு : 97509 55548 / 99522 52674



வேதாகம கதாபாத்திரம்: சுபா



# சிப்பிக்குள் முத்து

## காயு

இளம் வாலிபர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்கள். இந்த மாதம் சிப்பிக்குள் முத்து என்ற தொடரில் நாம் பார்க்க இருக்கும் நபர் காயு. காயு என்ற பெயரில் புதிய ஏற்பாட்டில் சில நபர்கள் இருக்கின்றனர். ஆனால் இன்று நாம் பார்க்க இருக்கும் காயு 3 யோவானில் வரும் நபர். 3 யோவானில், 'பிரியமான காயுவுக்கு' என்று தன்னுடைய கடிதத்தை யோவான் தொடருகின்றார். யோவான் காயுவை "பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்" (3 யோவான் 2) என்று வாழ்த்துகிறார். யோவான் காயு பற்றிக் கூறும் போது அவரை "சத்தியத்தில் நடக்கிறவன், உண்மையுள்ளவன் என்று குறிப்பிடுகிறார்." காயு தன்னுடைய சகோதரருக்கு மாத்திரமல்ல அந்நியருக்கும் உண்மையாய் இருந்தவர். உண்மையாய் இருந்தது மாத்திரமல்ல அவர்களை உபசரிக்கவும் செய்துள்ளார்.

யோவான் காயுவுக்கு நன்றி மட்டும் சொல்ல கடிதத்தை எழுதவில்லை. முக்கியமான பிரச்சனையை சமாளிக்கத்தான் இந்த கடிதத்தை எழுதியுள்ளார். காயுவைப் பற்றி அநேக காரியங்கள் நமக்கு தெரியாது. ஆனால் அவருடைய வாழ்க்கையைப் பற்றி அந்த கடிதத்தில் சொல்லப்பட்ட சில காரியங்கள் நமக்கு அநேக காரியங்களை கற்றுக் கொடுக்கின்றன்.

காயுவினிடத்தில் காணப்பட்ட மிகப் பெரிய பலம் சத்தியத்தில் நடப்பது. பல உபதேசங்கள் அன்று காணப்பட்டாலும் சத்தியத்தை மறுதலியாமல் உண்மையான சத்தியத்தில் நின்றார். மற்றும் ஊழியர்களை உபசரிக்க தவறாத நபர். இவ்விரண்டு குணங்களே அவரைப் பற்றி நாம் அறிய உதவுகின்றன. எல்லாரிடமும் நற்சாட்சிப் பெற்றவர். யோவானுக்கு பிள்ளை போன்றவர். அப்போஸ்தலன் யோவான் எழுதிய 3 யோவான் சிறிய புத்தகமாயினும், அதில் கூறப்பட்டுள்ள காயுவினுடைய வாழ்க்கை கிறிஸ்தவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது.

**அன்பான வாலிபர்களே, காயுவைப் போல உண்மையுள்ளவர்களாக இருங்கள். சத்தியத்திலே உறுதியாய் இருங்கள்.**



# என்ன படிக்கலாம்!

## ப்ளஸ் -2விற்கு பின் என்ன படிக்கலாம்? மாணவர்களின் பார்வைக்கு...

### SCIENCE COURSES (3 YEARS)
Bsc Physics
Bsc Chemistry
Bsc Botany
Bsc Zoology
Bsc Computer science
Bsc Mathematics
Bsc PCM
Bsc CBZ
Bsc Forestry
Bsc Dietician & Nutritionist
Bsc Home Science
Bsc Agriculture Science
Bsc Horticulture
Bsc Sericulture
Bsc Oceanography
Bsc Melsorology
Bsc Arthopology
Bsc Forensic Science
Bsc Food technology
Bsc Diary Technology
Bsc Hotel Management
Bsc Fashion Design
Bsc Mass Communication
Bsc Electronic Media
Bsc Multimedia
Bsc 3D Animation

### COMMERCE COURSES (3 YEARS)
CA Chatted Account
CMA Cost Management Account
CS Company Secretary (Foundation)
B.Com Regular
B.Com Taxation &Tax Procedure
B.Com Travel & Tourism
B.Com Bank Management
B.Com Professional
BBA /. BBM Regular
BFM Bachelor of Financial Management
BMS
BAF

### HUMANITIES COURSES (3 YEARS)
Advertising
BS General
Criminology
Economics
Fine Arts
Foreign languages
Home Science
Interior Design
Journalism
Library Science
Physical Education
Political Science
Psychology
Social Work
Sociology
Travel and Tourism

### MANAGEMENT COURSES
Business Management
Bank Management
Event Management
Hospital Management
Hotel Management
Human Resources Managemet
Logistics Management

### LAW COURSES (3/5 YEARS)
LLB,
BA+LLB
B.Com + LLB
BBM+LLB,
BBA. +LLB

### MEDICAL COURSES
MBBS
BUMS Unani
BHMS Homeopathy
BAMS Ayurveda
BSMS Sidha
BNYS Naturopathy
BDS Dental
BVSc Veterinary.

### PARAMEDICAL COURSES
Nursing
Pharm D
B.Pharm
D.Pharm
M. Pharm
Anesthesia technical
Cardiac Care technical
Perfusion technology
Cathllab technology
Clinical Optometry
Dental Hygiene
Dental Mechanic
Dental Technician
Health Inspector
Medical imaging & Tech...
Medical Lab technician
Medical Records tech
Medical X Ray Technician
Nuclear Medicine Tech
Occupational Therapist
Operation theater Tech
Ophthalmic Assistant
PHYSIOTHERAPY
Radiographic Assistant
Radiotherapy Technician
Rehabilitation Therapy
Respiratory Therapy Tech.
Blood Transfusion Tech..
Bsc Renal Dialysis

### BE/B.TECH ENGINEERING (4YEAR)
Petro chemical Engineering
Petroleum Engineering
Civil Engineering
Mechanical Engineering
Aeronautical Engineering
Aerospace Engineering
Agricultural Engineering
Architecture Engineering
Automobile Engineering
Automation & Robotics Eng.
Avionics Engineering
Biomedical Engineering
Bio technological Eng..
Chemical Engineering
Ceramics Engineering
Computer Science Engi..
Electronics & Comm.Engi.
Electrical & Electronics Engi.
Environmental Science Engi.
Information Science Engi
Industrial Engineering
Industrial Production Engi..
Instrumental Technology
Marine Engineering
Medical Electronics Engi..
Mining Engineering
Manufacturing Science Engi.
Naval Architecture Engi....
Nanotechnology Engi..
Polymer Technology Engi..
Silk Polymar Engi...
Carpet Technology Engi...
Textile engineering
Robotics
Genetic

### MANAGEMENT (NEW JOB OPPORTUNITY COURSES 2/3/5YEARS DURATION):
BBA /BBM
BBA Aviation
BBA Air Cargo Management
BBA Aeronautical
BBA Retail Marketing
BBA Customer Care Management
BBA Airline & Airport Management
BBA Cargo Management
BBA Office Management
BBA Store Management
BBA Mall Management
BBA Logistics
BCA SAP
BCA Cloud Computing

MBA Logistics
MBA Aviation
MBA HR
MBA Management

### POLYTECHNIC (10 TH CLASS)
Civil engineering
Mechanical engineering
Automobile engineering
Computer science engi.....
Electronics and communication Engineering
Electrical engineering
Petro chemical engineering

### ARCHITECTURE (5 YEARS +2)
B.Arch (NATAis Compulsory)
M.Arch .

# Revival 2024 IGNiTERS Camp



## Batch - 4
## (தமிழ் நாடு, பாண்டிச்சேரி )

கர்த்தரின் பெரிதான கிருபையால் மே மாதம் **3,4,5** ஆகிய தேதிகளில் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி வாலிபர்களுக்காக நடத்தப்பட்ட எழுப்புதலைப் பற்ற வைப்போர் முகாமில் சுமார் 1087 வாலிபர்கள் பங்குபெற்று, எழுப்புதலைக் குறித்த தரிசனத்தையும் பாரத்தையும் பெற்றுக்கொண்டு தாங்கள் படிக்கும் பள்ளிக் கல்லூரிகள் மற்றும் தாங்கள் வசிக்கும் பட்டணங்களில் கிராமங்களில் எழுப்புதலை பரவ செய்வோம் என்று தீர்மானம் எடுத்து சென்றனர். இதில் தேவ ஊழியர்கள் சகோ. மோகன் சி லாசரஸ், சகோ. வின்செண்ட் செல்வகுமார் மற்றும் சகோ. சாம் ஜெபராஜ் தேவனுடைய வார்த்தையை பகிர்ந்துகொண்டு, எழுப்புதலைக் குறித்த தரிசனத்தையும் எழுப்புதலில் வாலிபர்களின் பங்கு எவ்வளவு முக்கியம் என்பதையும் தெளிவாக எடுத்துரைத்தனர். கர்த்தர் வந்திருந்த அனைவர் மேலும் எழுப்புதலின் அக்கினியை அளவில்லாமல் ஊற்றி அனுப்பினார்.

**தேவனுக்கே மகிமை!**









































சாதனை: சுமா







# முடிவில்லா பயணம்





**அன்பான இளம் சாதனையாளர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள். இந்த உலகத்தில் மனிதர்களாக பிறந்த ஒவ்வொருவருக்குள்ளும் தனி திறமை உண்டு. அந்த திறமையை தனக்குள்ளே மறைத்து வைக்காமல் அதை ஒவ்வொருநாளும் மெருகேற்றிக்கொண்டே இருக்க வேண்டும். நம்முடைய திறமையை இந்த உலகத்திற்கு காட்ட போராட வேண்டும். போராட்டங்களில் வெற்றி பெறுபவர்களே சாதனையாளர்கள். அப்படி தன் வாழ்வில் போராடி வெற்றிக் கொடியை பறக்கவிட்ட சாதனையாளரின் வாழ்க்கை பயணம் உங்கள் முன்னே.**

1968ம் ஆண்டு நியூ ஜெர்சியில் ரெட்டினோசிஸ் **(Retinoschsis)** என்ற அரிய கண் நோயுடன் பிறந்தவர் **Erik Weihenmayer**. இவர் 15 மாத குழந்தையாக இருந்தபோது கண்டறியப்பட்ட இந்த நோய் கிளெகோமாவாக மாறி, இவருடைய 13வது வயதில் இவரை முற்றிலும் பார்வையற்றவராக்கியது. பார்வையற்றவராக இருந்த போதிலும் **Braille** முறையை கற்றுக் கொள்ள அவர் முன்வரவில்லை. பள்ளியில் படிக்கும் போது இவர் மல்யுத்தத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டு அதில் பயிற்சி பெற்று உயர்நிலைப் பள்ளியில் மிகப்பெரிய மல்யுத்த வீரராக மாறி அவரது அணிக்கு தலைமையும் தாங்கினார். இதற்கிடையில் தன்னுடைய தாயை இழந்து மிகுந்த சோர்வுக்குள்ளானார்.



பின்பு அவரது தகப்பனாரின் வழிகாட்டுதலின்படி மலை ஏற முயன்றார். தன்னுடைய கைகள் மற்றும் கால்களை பயன்படுத்தி, மலைகளிலுள்ள துவாரங்களைக் கண்டறிந்தார். இதோடு மட்டும் நிறுத்திவிடாமல் **Phoenix Country Day School**-ல் நடுநிலை ஆசிரியராகவும் மல்யுத்த பயிற்சியாளராகவும் பணியாற்றினார்.




இதோடு அவரின் பயணம் முடியவில்லை. அடுத்த கட்டமாக பெரிய முயற்சியில் ஈடுபட்டு, தன்னுடைய மலை ஏறும் பயணத்தை தொடர்ந்தார். வெய்ஹென்மேயரின் முதல் பெரிய மலை **Denali** ஆகும். மே 25, 2001 அன்று எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்த முதல் பார்வையற்றவர் என்ற பெருமையை வெய்ஹென்மேயர் பெற்றார்.

செப்டம்பர் 2002ல் 7 கண்டங்களின் 7 உயர்ந்த சிகரங்களை அடைந்த முதல் பார்வையற்றவர் என்று பெருமையையும் பெற்றார். 2004ஆம் ஆண்டில் ஆறு பார்வையற்ற திபெத்திய வாலிபர்களுடன் இணைந்து எவரெஸ்டின் வடக்கு பகுதியில் 21,500 அடி உயரம் ஏறினார். 2008ஆம் ஆண்டில், ஆஸ்திரேலியாவின் மிக உயரமான கார்ஸ்டென்ஸ் பிரமிட்டையும் சேர்ந்தார்.

இந்த சாதனைக்காக, அவர் டைம் இதழின் முகப்புச் செய்தியில் கௌரவிக்கப்பட்டார். எரிக் வெய்ஹென்மேயர் பார்வையற்றவராயிருப்பினும் தடகள வீரர், சாகசக்காரர், எழுத்தாளர், ஆர்வலர் மற்றும் ஊக்கமளிக்கும் பேச்சாளர் போன்ற பல பெயர்களைப் பெற்றுள்ளார்.



"பார்வை போனதால் என்னால் சாதிக்க முடியவில்லை" என்று எரிக் தன்னுடைய திறமையை தனக்குள்ளே அடக்கி வைக்கவில்லை. தனக்கு முன்பதாக இருந்த சூழ்நிலைகள் அனைத்தும் எதிர்மறையாக இருந்த போதிலும், அவைகளைப் போராடி வெற்றிக் கண்டார்.

இதை வாசிக்கும் இளம் சாதனையாளர்களே! போராட்டம் மற்றும் குறைகள் இல்லாத வாழ்க்கை இங்கு எவருக்கும் இல்லை. குறைகளையே நோக்கிக் கொண்டிருப்போம் என்றால் சாதிக்க முடியாது. எனவே போராட்டங்கள் மற்றும் குறைகளை ஒரு பக்கம் வைத்துவிட்டு முடிவில்லா வெற்றிப் பயணத்தை தொடங்குங்கள்.




# பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு!

## அருகில் உள்ள பள்ளியை தேர்ந்தெடுங்கள்

தொலைதூரப் பள்ளியைத் தேர்ந்தெடுக்காமல், கூடுமானவரை வீட்டுக்கு அருகில் உள்ள பள்ளிக்கூடங்களைத் தேர்ந்தெடுங்கள்

## கவனியுங்கள்

பள்ளி வாகனம் சரியாகப் பராமரிக்கப்படுகிறதா, வகுப்பறையில் காற்றோட்டமானச் சூழல் இருக்கிறதா, கழிப்பறை சுத்தமாக இருக்கிறதா, மாடிப்படிகள் விசாலமாக இருக்கின்றனவா, பள்ளி அமைந்து இருக்கும் பகுதியில் வேகத்தடை அமைக்கப்பட்டு இருக்கிறதா... இப்படியான விஷயங்களை அடிக்கடி கவனியுங்கள்.

## குழந்தைகளுடன் பேசுங்கள்

தினந்தோறும் குழந்தைகளிடம் மனம் விட்டு அரை மணி நேரமாவது உரையாடுங்கள். அதாவது, குழந்தை வெளிப்படையாக உங்களிடம் பேச உகந்த சூழலை உருவாக்குங்கள்.

## குழந்தை அழுகைக்கு மதிப்பு அளியுங்கள்

குழந்தை பள்ளிக்குச் செல்ல மறுத்தாலோ, அழுதாலோ விசாரியுங்கள். அதற்கு ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். குழந்தையின் குறைகளைக் கேட்டறிந்து பிரச்னைகளைத் தீருங்கள். மன அழுத்தத்துடன் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதும் பாதுகாப்பின்மைதான் என்பதை உணருங்கள்.

ஜெபம்: பெனிட்டா

# ஜெபக்கையேடு

1 இந்தியாவில் 79.9 மில்லியன் ஆண்கள் மது அருந்துவதாக ஆய்வுகள் கூறுகின்றன. மது அருந்துதல் தடுக்கப்பட ஜெபியுங்கள்.

2 இளம் வயதினர் (15-39 வயது) மது அருந்துதல் 5.24 சதவீதம் உயர்ந்துள்ளது. இளம் தலைமுறையினர் இந்த குடிப்பழக்கத்தை விட்டு வெளிவர ஜெபியுங்கள்.

3 லான்செட் ஆய்வின்படி 15-39 வயதுகுட்பட்ட 5.39 மில்லியன் இந்திய பெண்கள் மது அருந்துகிறார்கள். நம் நாட்டின் இளம் வாலிப பெண்கள் இதிலிருந்து வெளிவர ஜெபியுங்கள்.

4 இந்தியா முழுவதும் சுமார் 16 கோடி பேர் மது அருந்தும் பழக்கம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். இந்தியா மதுவில்லா தேசமாக மாற ஜெபியுங்கள்.

5 குடிப்பழக்கத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் குடும்பங்களில் சந்தோஷம், சமாதானம் உண்டாக ஜெபியுங்கள்.

6 காற்று மாசுபாட்டால் இந்தியாவில் ஆண்டுக்கு 21 லட்சம் பேர் மரிக்கின்றனர். காற்று மாசுபாடு நம் தேசத்தை விட்டு முற்றிலும் ஒழிய ஜெபியுங்கள்.

7 உலகின் மிகவும் மாசடைந்த 30 நகரங்களில் 22 நகரங்கள் இந்தியாவில் இருக்கின்றன. இந்த 22 நகரங்கள் தூய்மையாக்கப்பட ஜெபியுங்கள்.

8 காற்று மாசுபாட்டால் நுரையீரல் பாதிப்புகள் அதிகரித்து மரணங்கள் சம்பவிக்காதபடி தேவன் பாதுகாத்துக் கொள்ள ஜெபியுங்கள்.

9 காற்று மாசுபாட்டால் மழைப்பொழிவில் தாமதம், அதிகமான வெப்பம் ஏற்பட்டு பருவநிலை மாற்றம் ஏற்படுவது தடுக்கப்பட ஜெபியுங்கள்.

10 காற்று மாசுபாட்டை தடுத்து இந்திய தேச மக்கள் நல்ல ஆரோக்கியமான காற்றை சுவாசிக்க அரசு நடவடிக்கை எடுக்க ஜெபியுங்கள்.

11 ஜுன் மாதம் முதல் பள்ளிக்கு செல்லவிருக்கும் மாணவர்களின் பாதுகாப்பிற்காக ஜெபியுங்கள்.

12 சிறு குழந்தைகள் மீது தேவ ஆளுகையும், தேவ பாதுகாப்பும் உண்டாக ஜெபியுங்கள்.

13 மாணவ-மாணவியர்கள் பள்ளிக்கு செல்லும் வாகனங்கள் மீது இயேசுவின் இரத்தத்தை தெளித்து ஜெபியுங்கள்.

14 எந்த பிள்ளைகளுக்கும் விபத்துகளோ, எந்தவிதமான ஆபத்துகளோ நேரிடாமல் தேவன் பாதுகாத்துக் கொள்ள ஜெபியுங்கள்.

15 பள்ளிகளில் மாணவர்களுக்கு நல்ல கால சூழ்நிலைகள் உருவாகவும், அவர்கள் படிப்பில் சிறந்து விளங்கவும் ஜெபியுங்கள்.



16 படிக்க வசதியில்லாமல் படிப்பை பாதியில் நிறுத்த நினைக்கும் மாணவர்களுக்கு அரசு வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க ஜெபியுங்கள்.

17 எந்தவொரு மரண சம்பவங்களோ, தற்கொலைகளோ மாணவர்கள் மத்தியில் ஏற்படாதவாறு தேவன் பாதுகாத்துக் கொள்ள ஜெபியுங்கள்.



18 திருச்சபைகள் கர்த்தருக்காக எழும்பவும், தீவிரமாக செயல்படவும் ஜெபியுங்கள்.

19 திருச்சபைகள் மீது ஆவியானவரின் வல்லமை ஊற்றப்பட ஜெபியுங்கள்.

20 திருச்சபைகளில் ஒருமனதின் ஆவி ஊற்றப்படவும், விசுவாசிகள் விசுவாசத்தில் பெலப்படவும் ஜெபியுங்கள்.

21 இந்திய தேசத்தில் பாவத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் வாலிபர்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

22 வாலிபர்களை பாவத்திற்குள் அடிமைப்படுத்தும் பொல்லாத ஆவியின் கிரியைகள் கட்டப்பட ஜெபியுங்கள்.

23 இந்திய தேசத்தில் நடைபெறும் கொலைகள், விபத்துக்கள் மற்றும் தற்கொலைகள் மூலமாக ஏற்படும் இரத்தம் சிந்துதல்கள் தடுக்கப்பட ஜெபியுங்கள்.

24 இந்திய தேசத்தின் பொருளாதாரத்தில் ஆசீர்வாதம் உண்டாக ஜெபியுங்கள்.

25 இந்திய தேசத்திலுள்ள ஏழை-எளிய ஜனங்களின் வாழ்வாதாரம் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

26 இந்திய தேசத்தில் ஆபாசப் படங்களுக்கு அடிமைப்பட்டிருக்கும் ஜனங்கள் விடுதலையாக்கப்படவும், இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.

27 இந்திய தேசம் எல்லாவிதமான பயங்கரவாத தாக்குதல்களிலிருந்தும் பாதுகாக்கப்பட ஜெபியுங்கள்.

28 பள்ளி மற்றும் கல்லூரிகளில் பெண் பிள்ளைகளுக்கு எதிராக நடைபெறும் பாலியல் வன்கொடுமைகள் தடுக்கப்பட ஜெபியுங்கள்.

29 இந்தியாவில் அதிகரித்து வரும் அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி உயர்வு கட்டுப்படுத்தப்பட ஜெபியுங்கள்.

30 இந்திய தேசத்திலுள்ள அனைத்து விவசாய நிலங்களும் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

அலசல்: கெத்சி கிளார்வின்



# உணர்வுகள் DEPRESSION

வாலிபர்களாகிய நாம் இன்று மிகவும் போட்டி நிறைந்த உலகில் (Competitive World) வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு நாளையும் எதிர்கொள்ள பல சவால்கள் நம் முன்னே இருப்பது உண்மைதான். இதன் அடிப்படையில் நம் உணர்ச்சிகளை நாம் பலவாறு வெளிப்படுத்துகிறோம். அதிலும் குறிப்பாக, பயம் – தனிமை – கோபம் – வெறுப்பு – மன அழுத்தம் போன்ற பல எதிர்மறையான உணர்வுகளை அனுபவிப்பவராய் இருந்தால் இந்த பகுதி உங்களுக்கே!

## “மனச்சோர்வு” – DEPRESSION

இந்த நவீன கால உலகில் நாம் அதிகமாக கேள்விப்படும் வார்த்தைகளில் சில, ‘‘I AM IN DEPRESSION’’. ‘எனக்கு மிகவும் மன அழுத்தமாக உள்ளது’ என கூறும் வாலிபர்களே அதிகம். மனச்சோர்வாகிய இந்த உணர்ச்சியை உங்களால் கையாள முடியும்! தற்காலத்தில் சிறுவர்கள், வாலிபர்கள், குடும்பத்தலைவியர், திருமணமாகாதோர் மற்றும் தேவ ஊழியர்களும் கூட இந்த மனச்சோர்வினால் பாதிக்கப்படுவதுண்டு.



## மனச்சோர்விற்கான காரணம்:

**இப்படிப்பட்ட மனச்சோர்வு ஏற்படுவதற்கு அடிப்படையான காரணம் “ஏமாற்றம்”.**

* சிலர், தான் எதிர்பார்த்த காரியங்கள் நினைத்த நேரத்திற்குள் நடக்காததினால் ஏமாற்றம் அடைந்து மனச்சோர்வடைகிறார்கள்.

* சிலர், தான் நேசிக்கும் நபர்கள் எதிர்மறையான செயல்களில் ஈடுபடும்போது ஏமாற்றம் அடைந்து மனச்சோர்வடைகிறார்கள்.

இப்படிப்பட்ட சிதறடிக்கப்பட்ட எதிர்ப்பார்ப்புகள் ஒருவரை ஏமாற்றத்திற்குள்ளாக நடத்திச்செல்கின்றன. இதுவே மனச்சோர்வு ஏற்பட அடிப்படைக் காரணமாக அமைகிறது.

## வேதாகமத்தில் மனச்சோர்வை கையாண்ட நபர்:

ஜெபிக்கும் கிறிஸ்தவனுக்கும் சில நேரங்களில் மனச்சோர்வு ஏற்படுவது இயல்பானதே! ஆகிலும், அதனை கையாள்வதும் அதிலிருந்து வெளிவருவதுமே கர்த்தரின் பிள்ளைகளின் தனித்தன்மையாக கருதப்படுகின்றது. இப்படிப்பட்ட மனச்சோர்வினை கையாண்டு வெற்றிச்சிறந்தவர் தான் ‘‘நெகேமியா’’.

காரணம், நெகேமியாவின் நாட்களில் அவர் அலங்கத்தை கட்டிக்கொண்டிருக்கும் தருணத்தில் அவருக்கு மனச்சோர்வு உண்டு பண்ணும் பல காரியங்கள் நடந்துக்கொண்டே இருந்தன. தன்னலமின்றி இஸ்ரவேலர்களுக்கு உதவ வந்த இவருக்கு, எருசலேமுக்கு வந்ததும் கிடைத்தது ஏமாற்றமே! சன்பல்லாத், தொபியா என்ற இருவர் மூலம் எழும்பிய பிரச்சனைகள் மற்றும் இஸ்ரவேலர்களுக்குள் தீர்க்கப்படவேண்டிய



பிரச்சனைகள் என பல இன்னல்களைக் கடந்து மனச்சோர்வடைய அவருக்கு பல காரணங்கள் இருந்தும் கூட, அவர் அவற்றை சமாளித்து, மேற்கொண்டு, எருசலேமின் அலங்கத்தை 52 நாட்களில் கட்டி முடித்ததுமல்லாமல், முழு இஸ்ரவேல் ஜனங்களையும் கர்த்தரின் ஆதி அன்பிற்கு நேராய் திருப்பினார் இவர் இந்த மனச்சோர்வை ஞானமாய் கையாள்வதற்கு முக்கிய ரகசியமாய் கருதப்படுவது, நெகேமியா 8:10-ல் கூறியப்படி, ''கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் என்றான்.''

### ஆம்! மனச்சோர்விற்கு ஒரே தீர்வு - "மனமகிழ்ச்சி"

ஏமாற்றங்களை சந்திக்கும் தருவாயில் கர்த்தருக்குள் மனமகிழ்ச்சியாய் இருந்து பாருங்கள். உங்களின் காரியம் நிச்சயம் மாறுதலாய் முடியும்.

உடைக்கப்பட்ட நேரங்களில் என்னால் எப்படி மனமகிழ்ச்சியாய் இருக்கக்கூடும் என்று நினைக்கிறீர்களோ?

அதற்கு ஆவியானவரின் ஒத்தாசை அவசியம். எப்படியென்றால், மனச்சோர்வு ஏற்படும் நேரங்களில் தான் நம்மில் அநேகர் வேதம் வாசிப்பது, ஜெபிப்பது என்று தேவனோடு உள்ள உறவை துண்டித்து விடுகிறோம். இது சாத்தானின் தந்திரமே!

இப்படிப்பட்ட நேரங்களில் ஆவியானவரின் துணையோடு மனச்சோர்விலிருந்து வெளிவர முயற்சி செய்யலாம். அல்லது தனிமையில் வாடி, கவலைப்பட்டு, சாப்பிடாமல் உடலைக் கெடுத்துக் கொள்வதா என்று தீர்மானிப்பது நமது கையில் தான் உள்ளது.

### வாலிபனே! உன் தீர்மானம் என்ன?

* உன் அழுகையினால் உன் விண்ணப்பங்கள் கேட்கப்படலாம்! (2 இராஜா. 20:5)

* ஆனால், கர்த்தரிடத்தில் நீ மனமகிழ்ச்சியாய் இருக்கும்போது, உன் இருதயத்தின் வேண்டுதல்கள் கூட உனக்கு நிறைவேற்றப்படும். (சங்கீதம் 37:4)

### மனச்சோர்வை மேற்கொள்ள ஒரு சில வேத வசனங்கள்:

* நீதிமான்கள் கூப்பிடும்போது, கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கி விடுகிறார். (சங். 34:17)

* என் ஆத்துமா உம்மைத் தொடர்ந்து பற்றிக்கொண்டிருக்கிறது; உமது வலது கரம் என்னைத் தாங்குகிறது. (சங். 63:8)

* நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடேகூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். (பிலிப்பி. 4:6)

**அன்பு வாலிபர்களே! மனச்சோர்வடையும் நேரங்களில் உங்களால் ஜெபிக்கவே முடியாத சூழ்நிலைகளில் உங்களை நீங்களே தனிமைப்படுத்திக் கொள்ளாமல், ஜெபிக்கும் ஐக்கியத்தில் இணைந்துக்கொள்ளுங்கள், அல்லது மற்றவர்களிடம் ஜெப உதவியை நாடுங்கள். நினைவில் கொள்! மனச்சோர்வுடன் உன் நாட்களை போக்க கர்த்தர் உன்னை தெரிந்துக்கொள்ளவில்லை. நீ உன்னத திட்டத்திற்காய் பிரிக்கப்பட்ட எழுப்புதலின் சந்ததி என்பதை மறவாதே!**

# Revival IGNITERS Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## EVERY 1st SUNDAY (2nd June)

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre
2nd Floor,
Above Balakrishna Farsan Mart,
Opp. Apna Restaurant,
Near Kamarajar School,
90 Feet Road,
9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre,
Ajantha Mahal,
# 3, 6th West Cross Road,
Gandhi Nagar
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442082200

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
Jehovah Jireh Towers, 51/8D/3,
1st Floor Tiruchendur Road,
Muniasamypuram Land mark :
South Police Station to Kamaraj
College Rd. 9442885315

**TIRUPATI (3PM)**
Old Community Hall,
West Church
9985033401 | 9442885315

## EVERY 2nd SATURDAY (8th June)

**BANGALORE (3PM-5PM)**
Telugu Church, #21, Nethaji Road,
Railway Line, Pulikeshi Nagar, Frazer
Town.Opp: BWSSB Office.
9962085523 | 9591077110

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza,
[Theekadir Busstop] 41, K.Salai pudur
Byepass Road,Madurai - 18
9750955548 | 9344759316

## EVERY 2nd SUNDAY (9th June)

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

**MUMBAI - BHANDUP (4PM – 6:30PM)**
Bright High School, Village Road,
Bhandup (W), Mumbai – 400078
9004882470

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Grace Auto 1st floor,
163 , raja mill road pollachi,
9486037586 | 9487856205

**THANE (5PM - 7:30PM)**
R.P. Mangala High School
(Near Railway Station), Room No.6,
Opp. Bank of Maharashtra,
Thane (East)
9004882470

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9444381971 | 9488475315

**KOVILPATTI (3PM -5:30PM)**
St. Paul's Matriculation School
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
P.M.V. Packiyavathy Building,
R.A. Nursing Institute,
SCV Computers (top Floor)
Main Road,
Near Union Office Opposite
9965377427 | 9750955548

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
#203, Madurai Road,
Opp. Anantham Silk
Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:30PM)**
Jawarhalal Middle School
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre,
HOREB Complex, 1st Floor,
P K N Road, (Rathna vilas Stop)
9677858766 | 9442906567

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315

**CHENGALPET (3PM – 5:30PM)**
Blessing School, Tirukazhukundram Road
9488475315

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles
Opp., Shanthi Theater Rd
8870517324 | 8344111022

## EVERY 3rd SUNDAY (16th June)

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9488212915

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
0422 – 2309040 | 8903405315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur.
9488475315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram,
Kadaiyam (via) Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3 PM)**
VGP Victory House, Mount Road
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1A/25B, Bypass Road
(opp Arasu Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station Road
Zion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#216, 1st Floor, Near Fire Service,
Gandhiji Road
9750722000

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

**PONDICHERRY (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9442885315

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre,VK Road.
9442885315

**CHITTOOR (3PM TO 6PM)**
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

## EVERY 4th SATURDAY (22nd June)

**PERAMBALUR (5PM -8PM)**
World Revival Prayer Centre,
M K Complex, 71,Venkatesapuram,
Near Bank of Baroda,
Trichy Main Road.
9788788512

## EVERY 4th SUNDAY (23rd June)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre
H S R Tower, 2nd Floor,
Near CSI Gowdi Church
9488475315

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools, Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM – 6PM)**
Bethel Ground Floor
305/E, Mith Chauky, Marve Road,
Malad (W)
9664050567 | 9619996976


இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி

சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி

காலை 7 மணிக்கு
YouTube மற்றும்
Comforter TVயிலும் பார்க்கலாம்.

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!
9750955547

LIVE STREAMING
Revival IGNITERS
ON SUNDAY 30th JUNE
Time: 3:00 PM - 5:00 pm

IGNITERS, MONTHLY YOUTH FELLOWSHIP IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON LAST SUNDAY OF EVERY MONTH

சுவிசேஷ பயணம் ஜெனிபர்

# வீரமுள்ள தீமோத்தேயு





**Hello friends,** வீரமுள்ள தீமோத்தேயு என்னும் இத்தொடரில் மீண்டும் உங்களை சந்திப்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சி! இந்தத் தொடர் உங்களுக்கு மிகவும் பிரயோஜனமாக உள்ளது என்று விசுவாசிக்கிறேன். இதுவரை நாம் இத்தொடரில் தீமோத்தேயுவின் சிறு பிராயம், ஊழிய அழைப்பு, இளைஞனான தீமோத்தேயு ஊழியத்தில் எதிர்கொள்ளும் சூழ்நிலைகள், போன்ற பல காரியங்களைப் பார்த்தோம். கடந்த மாதத் தொடரில், பவுலுடன் தீமோத்தேயுவும் அவரது குழுவினரும் நற்செய்தி அறிவிக்கும் போது கலகக்காரர்களால் ஏற்பட்ட பிரச்சனைகள், தீமோத்தேயுவிற்கு எதிர்ப்புகளை சமாளிக்கும் மன பலத்தையும், திட விசுவாசத்தையும் கொடுத்தது என்று பார்த்தோம்.

நம் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட பொறுப்புகளும் நாம் ஆற்ற வேண்டிய கடமைகளும் உண்டு. நாம் அவற்றை சரியாக, சரியான நேரத்தில், நேர்த்தியாக, சிறப்பாக செய்கிறோமா?

என்னங்க! திடீர்னு Responsibilityய பத்தி சொல்றேன்னு நினைக்கிறீங்களா? நாம் இந்த மாதம் தீமோத்தேயுவிற்கு கொடுக்கப்பட்ட முதல் பொறுப்பைப் பற்றி பார்க்கப் போகிறோம். வாங்க தொடருக்குள் போவோம்.

## தீமோத்தேயுவிற்கு கொடுக்கப்பட்ட முதல் பொறுப்பு:

யூதர்களால் உண்டாகும் கலகத்தின் நிமித்தமாக பவுலும், மற்றவர்களும் இரவோடு இரவாக தெசலோனிக்கே பட்டணத்திற்கு கிளம்பி வர வேண்டி இருந்தது. அதுமட்டுமின்றி தெசலோனிக்கே பட்டணத்தை சேர்ந்த யூதர்கள் பெரோயாவுக்கும் வந்து கலகத்தைத் தூண்டி விட்டனர். இதனால் தெசலோனிக்கே பட்டணத்தில் இருந்த விசுவாசிகளின் நிலை எப்படி இருக்கிறது என்று பவுல் அப்போஸ்தலன் தெரிந்துகொள்ள ஆர்வம் கொண்டார். அந்த பணிக்காக சீலாவை அல்ல மிகவும் இளைஞனாகிய தீமோத்தேயுவையே அவர் தேர்ந்தெடுத்தார். அந்த கலகக்காரர்களிடம் அனுப்பும் அளவுக்கு பவுலுக்கு தீமோத்தேயுவின் மீது நம்பிக்கை இருந்தது. அவரது நம்பிக்கை வீணாகாதபடி ஆண்டவரின் துணையோடு கொடுத்த பணியை சிறப்பாக செய்து முடித்து விட்டார் தீமோத்தேயு. கலகம்



நடந்த தெசலோனிக்கே பட்டணத்திற்கு சென்று, இந்த உபத்திரவங்களினாலே அவர்கள் சோர்ந்து போகாதபடி புத்திசொல்லி, விசுவாசத்தில் அவர்களை திடப்படுத்துவதே தீமோத்தேயுவிற்கு கொடுக்கப்பட்ட முதல் வேலை. (இந்த உபத்திரவங்களினாலே ஒருவனும் அசைக்கப்படாதபடிக்கு உங்களைத் திடப்படுத்தவும், உங்கள் விசுவாசத்தைப்பற்றி உங்களுக்குப் புத்திசொல்லவும், நம்முடைய சகோதரனும் தேவ ஊழியக்காரனும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் எங்கள் உடன்வேலையாளுமாகிய தீமோத்தேயுவை அனுப்பினோம்.
1 தெசலோனிக்கேயர் 3:2).

முதல்முறையாக தன்னந்தனியாக ஊழியத்திற்கு செல்லும் ஒரு இளைஞனுக்கு இது ஒரு மிகப்பெரிய பொறுப்பு தான் அல்லவா? இது அவருடைய வயதிற்கு மீறிய காரியமாகத் தான் இருந்திருக்கும். அவர் சந்திக்க சென்ற சபையில் அவரை விட வயதில் பெரியவர்கள் இருந்திருப்பார்கள். அவர்கள் தான் கூறுவதை கேட்பார்களா? அல்லது தான் வயதில் சிறியவன் என்று சொல்லி அல்லல் தட்டுவார்களா என்று எதைப் பற்றியும் சிறிதும் யோசிக்காமல் கொடுக்கப்பட்ட பொறுப்பினை செய்து முடிக்க விரைந்தார் தீமோத்தேயு.

தெசலோனிக்கே பட்டணத்திற்கு சென்று அந்த சபையினரை விசுவாசத்தில் பலப்படுத்தினார். அந்த சபையின் விசுவாசத்தையும், அன்பையும் குறித்த நற்செய்தியோடு கொரிந்து பட்டணத்திற்கு வந்தார். இந்த செய்தி அப்போஸ்தலன் பவுலுக்கு மிகவும் உற்சாக மூட்டியது. இந்த நற்செய்திக்கு பதில் கடிதமாக பவுல் கொரிந்து பட்டணத்திலிருந்து தெசலோனிக்கே சபையாருக்கான முதல் கடிதத்தை எழுதி அனுப்பினார். இந்த தெசலோனிக்கேயருக்கு எழுதிய கடிதத்தை தான் மட்டும் எழுதுவதாக கூறாமல் தீமோத்தேயு, சீலா (1 தெச 1:1) இவர்கள் இருவர் பெயரையும் சேர்த்துக் கொண்டு அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றார் பவுல். கொரிந்து பட்டணத்தில் தொடர்ந்து தங்கி இருக்கும் போது இந்த மூவரின் பெயரில் அப்போஸ்தலன் பவுல் தெசலோனிக்கே சபையாருக்கான தனது இரண்டாவது நிருபத்தையும் அனுப்பினார் (2 தெச1:1).

யோசித்துப் பாருங்கள் 20 வயது வாலிபன் தன்னந்தனியாக இவ்வளவு பெரிய பொறுப்பை எடுத்து, அதை சிறப்பாகவும் அசால்டாகவும் செய்து முடித்ததையும், அதன் விளைவையும் நாம் பார்க்கின்றோம். தனக்கு கொடுக்கப்பட்ட இந்த முதல் பொறுப்பை தீமோத்தேயு சரியாக செய்ததினால் அவருக்கு மேன்மேலும் பொறுப்புகள் கொடுக்கப்பட்டிருக்கும் அல்லவா? அவர் சரியாக செய்ததினிமித்தம் பவுலுக்கு மட்டுமல்ல, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் அவர் மீது நம்பிக்கை அதிகரித்திருக்கும் அல்லவா?



பொதுவாக பொறுப்புகளை இளைஞர்களிடம் கொடுப்பார்கள். ஏனென்றால் அவர்கள் துணிச்சல் உள்ளவர்கள், ஈடுபாட்டுடன் எந்த காரியத்தையும் துடிப்புடனும், சுறுசுறுப்புடனும், ஆழமாக சிந்தித்து எடுத்த காரியத்தை சரியாக செய்து முடிப்பார்கள் என்பதால் எதையும் நம்பி இளைஞர்களிடம் கொடுப்பார்கள். யார் ஒருவர் தனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புகளை சரியாக செய்கிறாரோ அவருக்குத் தான் அதிக பொறுப்புகளும், அதற்குரிய மேன்மைகளும் கிடைக்கும். அந்த நபர் மீது தான் பிறருக்கு நம்பிக்கை அதிகம் உண்டாகும். அந்த நம்பிக்கையினால் அவர்கள் பல உயர்வுகளை தங்கள் வாழ்க்கையில் காண்பார்கள். உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான் என்று வேதம் நமக்கு சொல்லுகிறது.

**நமக்கும் மகள்(ன்), படிக்கும் இடத்தில் மாணவன், மாணவி, வேலை செய்யும் இடத்தில் பணிபுரிபவர், சபையில் விசுவாசி, தேசத்தில் குடிமகன்(ள்) என்ற அநேக பொறுப்புகள் உள்ளன. நாம் அவைகளை சரியாக செய்கிறோமா? அவைகளை நிறைவேற்ற முயற்சிக்கின்றோமா? இல்லையென்றால் அவைகளை அல்லல் தட்டுகிறோமா? சிந்தித்துப் பார்ப்போம். ஆண்டவரிடம் ஆசீர்வாதங்களையும் உயர்வுகளையும் கேட்கும் நாம், நமக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புகளில் எப்படி இருக்கிறோம் என்பதை திரும்பிப் பார்க்க மறந்து விடுகிறோம். ஒருசில நேரங்களில் நம்முடைய தோல்விக்கு, நாம் நமக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புகளில் சரியாக இல்லாதது காரணமாக அமைந்துவிடுகிறது. ஒருவேளை அப்படி இருக்குமானால் நம்மை ஆராய்ந்து, அவருடைய உதவியினால் அவைகளை சரி செய்வோம். வெற்றி நிச்சயம்!**

**- வீர சகாப்தம் தொடரும்...**



எச்சரிப்பின் செய்தி: டேவிட்

# நைசா நரகம்!

பகுதி - 5

**Hello Friends, நம்மை நரகத்திற்கு கொண்டு போக பிசாசு பயன்படுத்தும் கண்ணி தான் பாவம். அதில் ஒரு கண்ணியாகிய பொய்யைக் குறித்து கடந்த மாதம் தெளிவாக கற்றுக் கொண்டோம். Like பொய் என்றால் என்ன? பொய்யைக் குறித்து வேதம் என்ன சொல்கிறது? யாரெல்லாம் பொய்யர்கள்? பொய் என்கிற பாவம் யாரிடம் இருந்து வருகிறது? பொய் பேசுவதினால் வரும் பாதிப்புகள் என்ன? என்று பல கேள்விகளுக்கு பதிலை தெரிந்து கொண்டோம். இந்த மாதத்தில் சாத்தான் பயன்படுத்துகிற வேறொரு கண்ணியாகிய 'வெறி'யைக் குறித்து நாம் தெரிந்துக் கொள்ளப் போகிறோம்.**

## வெறி

என்னது வெறியா! என்று யோசிக்கிறீர்களா? எந்த ஒரு காரியத்திலும் **too extreme** போவது வெறி. சிலர் நினைக்கலாம் வெறியில் கொலை வெறி, மூர்க்கவெறி, இரத்த வெறி, பணத்தின் மேல் வெறி இன்னும் சிலருக்கு குடி வெறி இப்படி நிறைய விதமான வெறி இருக்கு நீங்கள் எதை சொல்றீங்க என்று ஒருசிலர் யோசிக்கிறீர்கள். **English Bible**ல வெறி என்ற வார்த்தைக்கு **drunkenness** என்று எழுதியிருக்கிறது. மதுபானத்தை குடித்து, குடித்து அதினால் வரும் போதையில் மயங்கி இருப்பது வெறி. இன்னும் சுருக்கமாக குடிமயக்கம், குடிபோதை என்று சொல்லலாம். இந்த காலத்தில் எங்கு பார்த்தாலும் இந்த பாவம் பெருகியிருக்கிறது. சிறுபிள்ளைகள் முதல் பெரியவர்கள் வரை வயது வித்தியாசமின்றி



அனைவரும் குடித்து வெறிக்கிறார்கள். ஒரு காலத்தில் ஆண்கள் மட்டுமே குடித்தார்கள். ஆனால் போக போக பெண்களும் நாங்கள் ஆண்களுக்கு சளைத்தவர்கள் அல்ல, எங்களுக்கும் ஆண்களைப் போல எல்லா உரிமையும் உண்டு என்று சொல்லி குடிக்க ஆரம்பித்தார்கள். இந்த காலத்தில் குடும்பமாக அமர்ந்து குடிக்கிறார்கள்.

**School, College**ல் படிக்கும் மாணவ, மாணவிகள் **uniform dress**ல் குடிக்கிற வீடியோ **Social Media**வில் வந்து கொண்டுதான் இருக்கிறது. ஒரு காலத்தில், ஏன்டா அவன் குடிக்கிறான் என்று கேட்டால், 'அவன் படிக்காதவன் அதுனால குடிக்கிறானு' சொல்வாங்க. ஆனால் இந்த காலத்தில் படித்தவர்கள் தான் அதிகம் குடிக்கிறார்கள். ஒரு காலத்தில் எப்போவாவது குடித்தார்கள். ஆனால் இந்த காலத்தில் **New year party, Birthday party, Marriage Function, Job** கிடைச்சா **treat, Promotion** வந்தாலும் **treat,** குழந்தை பிறந்தா **treat** என்று எல்லா **Occasions**லேயும் குடிக்கிறார்கள். சில வாலிப ஆண்கள் மற்றும் பெண்கள் **Night DJ, Pub, Club, Bar** என்று **Alcoholic centres**க்கு போய் குடித்து வெறிக்கிறார்கள். சிலர் பொழுதுபோக்குக்காக குடிக்கிறார்கள், சிலர் பெருமைக்காக குடிக்கிறார்கள், சிலர் தங்களுக்கு இருக்கிற பிரச்சனைகளை மறக்க குடிக்கிறார்கள், இன்னும் சில வாலிபர்கள் கஞ்சா, **Cocaine, Heroin** போன்ற தடை செய்யப்பட்ட போதை பொருட்களை தெரியாமல் வாங்கி பயன்படுத்தி போதையில் வெறிக்கிறார்கள். இப்படி நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த சமுதாயத்தில் அநேகர் குடித்து வெறிக்கிறார்கள். அவர்களைதான் வேதம் வெறியர்கள் என்று சொல்கிறது.

இந்த ''வெறி'' என்கிற பாவம் எந்த காலத்திலும் இல்லாத அளவு ஏன் இவ்வளவு பெருகியிருக்கிறது என்றால் இது கடைசிக் காலம் உலகத்தின் முடிவுக்கும் இயேசுவின் வருகைக்கும் அடையாளம் என்ன என்று சீஷர்கள் இயேசுவிடம் கேட்ட பொழுது, இயேசு சொன்ன அநேக அடையாளங்களில் இதுவும் ஒன்று. 'உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள்



உங்கள்மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்' (லூக்கா 21:34).




குடிப்பவர்கள் தரித்திரராவார்கள் நீதி. 23:21; 21:17 என்று வேதம் சொல்லுகிறது. சம்பாதிக்கிற பணம் எல்லாவற்றையும் குடித்து, சொத்தையும் அழித்து, கடன் வாங்கி கடனாளிகளாக மாறி விடுவார்கள் நீதி. 23:29-35 வசனங்களில் மதுபானம் குடித்து வெறிக்கிறதினால் வரும் பாதிப்புகள் பற்றி அறிய முடியும். பாருங்கள், வேதத்தில் நோவா குடித்து வெறி கொண்டதினால் தன்னுடைய வஸ்திரம் விலகினதைக் கூட அறியாமல் படுத்திருந்தான் (ஆதி. 9:21). வெறி மனுஷனை தடுமாற வைக்கும் (யோபு 12:25). இந்த பாவத்தினால் அநேகர் வியாதி வந்து மரித்து போகிறார்கள். இதனால் அநேக பெண்கள் விதவைகளும், அநேக பிள்ளைகள் தகப்பனற்றவர்களுமாய் இருக்கிறார்கள். இந்த வெறி என்கிற பாவம் நம் வாழ்வில் சாபத்தைக் கொண்டு வரும் (ஏசாயா 5:11). இந்த பாவம் நாம் இவ்வுலகில் வாழும் போது மட்டும் நமக்கு பாதிப்பை கொண்டு வராது, நாம் மரித்த பிறகு நம் ஆத்துமாவை நரகத்திற்குக் கொண்டு செல்லும். வெறியர்கள் பரலோக ராஜ்யம் போக முடியாது (கலா. 5:21; 1 கொரி. 6:10).

## வேதம் சொல்லும் ஆலோசனை என்ன?

மதுபானத்தினால் வெறி கொண்டவர்கள் இருளிலே நடப்பவர்களைப்போல் இருக்கிறார்கள். இருளில் நடப்பவர்கள் பாதை தெரியாமல் தடுமாறி, பல விபத்துகளை சந்திக்க நேரிடும். எனவே வெறி உள்ளவர்களாய் நடவாமல் பகலிலே நடக்கிறவர்களைப் போல சீராய் நடவுங்கள் (ரோமர் 13:13) என்று வேதம் கூறுகிறது. மற்றொரு இடத்தில் ''துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிக்கொள்ளாமல் ஆவியினால் நிறைந்து தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்'' என்று வேதம் சொல்கிறது (எபேசியர் 5:18,19).

இதை வாசிக்கும் வாலிப சகோதரனே, சகோதரியே , பாவத்திற்கு ஒரு வல்லமை உண்டு. பாவம் சமாதானத்தை பாதிக்கும், வியாதியைக் கொண்டு வரும், பாவம் உங்களை அடிமைப்படுத்தும் (யோவான் 8: 34). எல்லா பாவத்துக்குப் பின்னாடியும் பிசாசு தான் கிரியை செய்கிறான். 'ஆரம்பத்தில் விளையாட்டாக குடிக்க ஆரம்பித்து போக போக குடித்து வெறிக்கிற அளவிற்கு அடிமையாகிவிட்டேன்' என்று நினைக்கிறீங்களா? இன்னும் சிலர் அது பாவம் என்று தெரிந்தும் அதை விடமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறீங்களா? கலங்காதீங்க, இயேசு கிறிஸ்து நம் பாவத்தை மன்னிக்கிறவர் மட்டும் அல்ல, பாவத்திலிருந்து விடுதலையும் கொடுப்பவர். அதற்காகத்தான், அவர் இரத்தம் சிந்தி உங்கள் பாவத்தை சுமந்து சிலுவையில் பிசாசை ஜெயித்தார். 'குமாரன் உங்களை விடுதலையாக்கினால் நீங்கள் மெய்யாகவே விடுதலையாவீர்கள்' என்ற வார்த்தையின்படி நீங்கள் இன்றைக்கு உங்களை அர்ப்பணித்து, 'இயேசுவே, என் பாவத்தை மன்னியும், பாவத்திலிருந்து விடுதலை தாரும்' என்று அவரை நோக்கி கூப்பிடும் போது நீங்கள் எத்தனை வருடங்களாக இந்த பாவத்திற்கு அடிமையாக இருந்தாலும் இயேசு கிறிஸ்துவின் ஒரு தொடுதல் உங்களை முற்றிலுமாய் விடுதலையாக்கும்.

**அன்பான வாலிபர்களே பிசாசானவன் "வெறி" என்கிற பாவத்தைச் செய்ய வைத்து நைசாக நம்மை நரகத்திற்கு கொண்டு போக தீவிரமாக செயல்படுகிறான். எனவே விழித்திருந்து, தெளிந்த புத்தியுள்ளவர்களாய், ஜாக்கிரதையாய் நடந்து, இந்த பாவத்தின் மூலம் வருகிற நரக தண்டனைக்கு தப்பித்துக் கொள்ளுங்கள். Okay Friends அடுத்த மாதம் நரகத்திற்கேதுவான வேறொரு பாவத்தைக் குறித்து நாம் தெரிந்து கொள்ளலாம்.**

தகவல்: வயலா

# NISUIN BERIYTH

## (திருமண உடன்படிக்கை)

பகுதி - 5

மனுஷனுடைய ஆயுசு நாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாகவும் இருக்கலாம் (சங். 90:10). இதை திருமணத்திற்கு முன், திருமணத்திற்கு பின் என்று பிரித்தால், திருமணத்திற்கு முன் உள்ள நாட்கள் தான் குறுகினது. உதாரணமாக ஒரு மனிதன் 25 வயதில் திருமணமாகி, 75 வயது வரை வாழ்ந்தால், ஏறத்தாழ ஒரு மடங்கு அதிகமான நாட்கள் திருமணத்திற்கு பின் தான் வருகின்றன. எனவே திருமண வாழ்க்கை ஒவ்வொருவருக்கும் இனியதாக, சந்தோஷம், சமாதானம், நிம்மதி தருவதாக இருக்க வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார். இதற்கு ஒவ்வொரு வாலிபனும், வாலிப சகோதரியும் தேவனுக்கு ஒத்துழைப்பு தர வேண்டும். ஆனால் அவ்வாறு "தேவ சித்தத்தின்படியே வாழ்க்கைத் துணையை தெரிந்து எடுப்பேன், கர்த்தருடைய வேளை வரும் வரை காத்திருப்பேன்" என்று ஒரு வாலிப மகனோ, மகளோ தீர்மானிக்கும் போது சத்துரு பல தடைக் கற்களைப் போடக் கூடும். அப்படிப்பட்ட தடைக் கற்களையும் அவற்றை மேற்கொள்ள பரிசுத்த வேதாகமம் தரும் ஆலோசனைகளையும் பற்றிக் இம்மாதம் காண்போம்.

## பாவம்

கிறிஸ்துவை அறிவதற்கு முன் அல்லது அறிந்திருந்தும் நண்பர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர்களைப் பிரியப்படுத்த துணிகரமாய் இளவயதில் விளையாட்டாக ஏதேனும் பாவத்திற்கு அடிமைப்பட்டிருந்திருக்கலாம். அந்தப் பாவம் உங்களுக்குள் குற்ற உணர்ச்சியை ஏற்படுத்தலாம். இல்லாவிட்டால் அந்த பாவத்தைக் குறித்து அறிந்திருக்கும் நபர், நீ எல்லாம் திருமண வாழ்விற்கு ஏற்றவன் / ஏற்றவள் அல்ல என்று உங்களைக் குத்திக் காண்பிக்கலாம். மனம் நோக வைக்கலாம். நீங்களும் கூட, இப்பொழுது என்ன செய்யலாம் என்று திகைக்கலாம். சோர்ந்து போய் உட்கார்ந்து விடாதீர்கள். ஒன்றை நன்றாய் அறிந்து கொள்ளுங்கள், நம்முடைய தேவன் அன்பானவர்; அவர் பாவத்தை தான் வெறுக்கிறார் பாவியை அல்ல. பாவிகளை இரட்சிக்கவே கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் (1 தீமோ. 1:15). தன் பாவங்களை மறைக்கிறவன் தான் வாழ்வடைய மாட்டான், அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான் (நீதி. 28:13). உதாரணமாக, கல்லூரி நாட்களில் ஒரு வாலிபன் விளையாட்டாக,



நண்பர்களுடன் சேர்ந்து புகைபிடிக்கும் பழக்கத்தைக் கற்று இருக்கலாம். திருமண வாழ்க்கைக்கு ஆயத்தப்படும் சமயத்தில், அது பாவம் என்று உணரும் பட்சத்தில், தேவ சமூகத்தில் அமருங்கள், உங்கள் பாவம் எதுவானாலும் தேவனிடம் அறிக்கையிடுங்கள். தேவனிடம் மன்னிப்பு கேளுங்கள், தன்னை சிலுவையில் அறைந்தவர்கள் தங்கள் தவறை உணரும் முன்னரே, 'பிதாவே இவர்களுக்கு மன்னியும்' என்று அவர்களுக்காக மன்றாடிய இயேசு கிறிஸ்து, நீங்கள் உங்கள் தவறை உணர்ந்து அறிக்கையிடும் போது, உங்களை மன்னியாமல் இருப்பாரோ. தேவ பிரசன்னம், தேவ சமாதானம் உங்கள் உள்ளத்தில் வரும் வரை போராடுங்கள் அப்புறம் என்ன? நீங்கள் பெறப் போகும் ஆசீர்வாதத்தை யாராலும் தடுக்க முடியாது.

## பெற்றோர்

சில வேளைகளில் இரட்சிக்கப்படாத அல்லது தேவனை அறியாத பெற்றோர், நீங்கள் இரட்சிப்பைப் பெற்ற வாழ்க்கைத் துணையை பெறும் போது எதிர்ப்பு தெரிவிப்பர். அவ்வேளையிலும் கர்த்தர் மேல் உங்கள் பாரத்தை வைத்து விடுங்கள். அடைக்கப்பட்ட வாசல்களை திறக்க அவரால் மட்டுமே முடியும். ஒருமுறை இயேசுவை அறியாத குடும்பத்தில் பிறந்த ஒரு தொழிலதிபரின் மகள் கல்லூரி நாட்களில் சிநேகிதிகள் மூலமாக இயேசு இரட்சகரை அறிந்துக் கொண்டாள். கல்லூரி விடுதியில் பயிலும் வரை எந்த பிரச்சனையும் இல்லை. ஆனால் கல்லூரி படிப்பு முடிந்து வீட்டிற்கு திரும்பிய போது தான் அதிர்ச்சி காத்திருந்தது. தன் தகப்பன் இயேசுவை அறியாத மற்றொரு தொழிலதிபரின் மகனோடு தனக்கு திருமணத்தை நிச்சயித்திருப்பதை அறிந்தாள். அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இயேசுவைத் துதிக்காமல், ஜெபிக்காமல், வேதம் வாசிக்காமல் ஒருநாள் கூட தன்னால் வாழ முடியாதே, என்ன செய்வதென்று அறியாமல் திகைத்தாள். பரிசுத்த வேதாகமத்திலும் கூட எட்டு இடங்களில் (யாத். 20:12; உபா. 5:16; மத். 15:4; மத். 19:19; மாற்கு 7:10; மாற்கு 10:19; லூக்கா 18:20; எபே. 6:3) உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்று எழுதியிருப்பதினால் பெற்றோரை எதிர்த்து பேசுவதையும், அவர்கள் விருப்பத்துக்கு மாறாக செயல்படுவதையும் மனம் விரும்பவில்லை. தனது பிரச்சனையை எந்த மனிதரிடமும் சொல்லவில்லை. அவள் தனிமையில் இருக்கும் போதெல்லாம் உபவாசித்து போராடி இயேசுவிடம் ஜெபித்தாள். பல இரவுகள் தூங்காமல் இராமுழுவதும் ஜெபித்தாள். முடிவில் தேவன் உலகம் தரமுடியாத தேவ சமாதானத்தால் அந்த அன்பு மகளின் உள்ளத்தை நிறைத்து, தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாய் நடக்கிறது என்ற வசனத்தைத் தந்து தேற்றினாராம். பின்னர் அந்த மகள் கலங்கவும் இல்லை, திருமணத்திற்கு மறுப்பு தெரிவிக்கவுமில்லை. திருமணம் இனிதாய் நடந்தேறியது. மிகவும் பயத்துடனும், நடுக்கத்துடனும் தான் இயேசுவை நேசிப்பதை தன் கணவரிடம் கூறிய போது, அவரோ தானும் ஒரு ரகசிய கிறிஸ்தவன் என்றும், தனக்கு ஒரு ஜெபிக்கும் மனைவியே வாழ்க்கைத் துணையாக தருமாறு அவர் பல நாட்களாக ஜெபித்ததாகவும் கூறினாராம். வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத அளவுக்கு இருவரும் மகிழ்ச்சி அடைந்தனர். 'சாதிக்க முடியாததையும், ஜெபத்தால் சாதித்து விடலாம்' என்று இந்த அன்பு மகள் நிரூபித்து விட்டாள் அல்லவா?



**அன்பு பிள்ளைகளே, பணத்திற்கோ, பதவிக்கோ, அந்தஸ்திற்கோ ஆசைப்படுகிறவர்கள் அல்லது குடிப்பழக்கம் போன்று ஏதேனும் பாவ பழக்கத்திற்கு அடிமைப்பட்ட ஒரு சில பெற்றோரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் தங்கள் பிள்ளைகளின் நல்வாழ்வுக்காகவே பிரயாசப்படுவர். எனவே திருமண வாழ்வில் பெற்றோரின் சம்மதமும், ஆசீர்வாதமும் மிகவும் அவசியம் என்பதை மறவாதீர்கள்.**

**தேவசித்தத்திற்கு எதிராக வரும் மற்ற தடைக் கற்களோடு Nisuin Beriyth தொடரும்.**

# செய்திகள்!

## ஜிஎஸ்டி வசூல் முதல் முறையாக ரூ.2 லட்சம் கோடியை தாண்டியது




புதுடெல்லி: ஜிஎஸ்டி வசூல் புதிய உச்சம் தொட்டுள்ளது. இதுவரை இல்லாத அளவில் கடந்த ஏப்ரல் மாதத்தில் ரூ.2.10 லட்சம் கோடி ஜிஎஸ்டி வசூலாகியுள்ளதாக மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வலுவான உள்நாட்டுப் பரிவர்த்தனை மற்றும் இறக்குமதி காரணமாக ஜிஎஸ்டி வசூல் உயர்ந்திருப்பதாக மத்திய நிதி அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது. கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ரூ.1.87 லட்சம் கோடி ஜிஎஸ்டி வசூலானது. இந்நிலையில், இவ்வாண்டு ஏப்ரலில் 12.4 சதவீதம் உயர்ந்து ரூ.2.10 லட்சம் கோடி வசூலாகியுள்ளது.

மத்திய ஜிஎஸ்டி ரூ.43,846 கோடி, மாநில ஜிஎஸ்டி ரூ.53,538 கோடி, ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி ரூ.99,623 கோடியாக உள்ளது. செஸ் வசூல் ரூ. 13,260 கோடியாக உள்ளது.

ரீஃபண்ட் வழங்கப்பட்ட பிறகான நிகர ஜிஎஸ்டி வசூல் ரூ.1.92 லட்சம் கோடியாக உள்ளது. சென்ற ஆண்டு ஏப்ரலுடன் ஒப்பிடுகையில் இது 15.5 சதவீதம் அதிகம் ஆகும்.

ஜிஎஸ்டி வசூல் உயர்ந்திருப்பது உள்நாட்டு தொழில் மேம்பட்டு இருப்பதைக் காட்டுவதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த ஏப்ரல் மாதத்தில் உள்நாட்டு பரிவர்த்தனை 13.4 சதவீதமும் இறக்குமதி 8.3 சதவீதமும் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு குறிப்பிட்டுள்ளது.

நாடு முழுவதும் ஒரே வரி முறையைக் கொண்டு வரும் நோக்கில் மத்திய அரசு 2017-ம் ஆண்டு ஜூலை மாதம் ஜிஎஸ்டியை நடைமுறைப்படுத்தியது. இந்நிலையில், தற்போது முதன்முறையாக ஜிஎஸ்டி வசூல் ரூ.2 லட்சம் கோடியைத் தாண்டியுள்ளது. 2017 ஜூலை முதல் 2024 ஏப்ரல் வரையில் ஜிஎஸ்டி வசூல் ஆண்டுக்கு சராசரியாக 13 சதவீதம் அதிகரித்துள்ளது.

2023-24 நிதி ஆண்டில் மொத்த ஜிஎஸ்டி வசூல் ரூ.20.18 லட்சம் கோடியாக உள்ளது. 2022-23 நிதி ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 11.7 சதவீதம் அதிகம் ஆகும். – 02 மே, இந்து தமிழ் திசை.

## சென்செக்ஸ் 733 புள்ளிகள் சரிவு: முதலீட்டாளர்களுக்கு ரூ.2 லட்சம் கோடி இழப்பு



மும்பை: பங்குச் சந்தையில் நேற்று கடும் சரிவு காணப்பட்ட நிலையில் முதலீட்டாளர்களுக்கு ரூ.2 லட்சம் கோடிக்கு மேல் இழப்பு ஏற்பட்டது. முதலீட்டாளர்கள் அதிக எண்ணிக்கையில் பங்குகளை விற்றதால் இந்தச் சரிவு ஏற்பட்டதாக நிபுணர்கள் தெரிவித்து உள்ளனர்.

நேற்றைய வர்த்தக முடிவில், சென்செக்ஸ் 732.96 புள்ளிகள் குறைந்து 73,878.15 ஆகவும், நிஃப்டி 172.35 புள்ளிகள் குறைந்து 22,475.85 ஆகவும் சரிந்தது. சதவீத அளவில் சென்செக்ஸ் 0.98%, நிஃப்டி 0.76% சரிவைக் கண்டன.

பங்குகள் சரிவு: எல் அண்டு டி (2.82%), ஜேஎஸ்டபிள்யூ (2.57%), மாருதி சுஸுகி (2.51%), நெஸ்லே (2.24%), ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் (2.24%), பார்தி ஏர்டெல் (2.14%), டாடா மோட்டார்ஸ் (1.75%), கோடக் மஹிந்திரா பேங்க் (1.69%), அல்ட்ராடெக் சிமெண்ட் (1.58%) என்ற அளவில் சரிந்தன. அதேசமயம், பஜாஜ் பின்சர்வ், மஹிந்திரா, ஐசிஐசிஐ பேங்க்,விப்ரோ, இன்போசிஸ் ஆகிய நிறுவனங்களின் பங்குகள் ஏற்றம் கண்டன. நிஃப்டி குறியீட்டில் உள்ள 50 பங்குகளில் 35 நிறுவனங்களின் பங்கு மதிப்பு சரிவைக் கண்டன.

நேற்றைய சரிவால், முதலீட்டாளர்களுக்கு ரூ.2 லட்சம் கோடிக்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முதலீட்டாளர்கள் பங்குகளை அதிக எண்ணிக்கையில் விற்றது, நேற்றைய சரிவுக்கு முக்கியக் காரணமாக கூறப்படுகிறது.

ஆசியாவில் ஹாங்காங் பங்குச் சந்தை ஏற்றத்திலும், தென்கொரிய பங்குச் சந்தை இறக்கத்திலும் காணப்பட்டன. – 04 மே, இந்து தமிழ் திசை.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211




# தந்தையர் தினம்

**தந்தையர் தினத்தன்று அப்பாவுக்கு பிடித்த பரிசுப் பொருட்கள் வாங்குவதுமற்றும் பிடித்த இடங்களுக்கு கூட்டிச் செல்வது போன்ற பல விஷயங்களை நாம் செய்வதுண்டு. இந்த தந்தையர் தினத்தில் உங்கள் அப்பாவை நீங்கள் மகிழ்ச்சியாக வைத்திருக்க ஆசைப்பட்டால் அதற்காக நாங்கள் சில ஐடியாக்களை உங்களுக்கு சொல்லுகிறோம். சரி வாங்க இந்த தந்தையர் தினத்தில் உங்கள் அப்பாவை எப்படியெல்லாம் சந்தோஷப்படுத்தலாம் என்பதை பார்க்கலாம்.**

**உணவுகளை பரிசளிக்கலாம்:** நீங்கள் விரும்பும் ஒரு நபருக்கு பரிசுப் பொருட்கள் தான் வாங்கி கொடுக்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது. உங்கள் அப்பாவுக்கு பிடித்த தின்பண்டங்கள், விருந்துகள் மற்றும் உணவுகளை சமைத்து சர்ப்ரைஸ் செய்யலாம். நீங்களும் அவரோடு இணைந்து சாப்பிடும் போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்.

**வேலைகளை நீங்கள் செய்யலாம்:** தினசரி உங்கள் அப்பா அதிகமான வேலைகளை செய்து வருகிறார் என்றால் அவருடன் இணைந்து சில வேலைகளை செய்யும்போது அவருக்கு சிறிது ஓய்வு கிடைக்கும். அவர் ஓய்வெடுக்கும் சமயத்தில் இருவரும் இணைந்து மனம் விட்டு பேசி மகிழலாம். இது அவருக்கு மிகுந்த சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் அளிக்கும்.

**பிடித்ததை செய்து கொடுங்கள்:** ஒவ்வொரு நாளும் அப்பா என்பவர் தன்னுடைய குழந்தைகளுக்காக பல விஷயங்களை செய்கிறார். ஆனால் நீங்கள் அவருக்கு என்ன செய்தீர்கள். இந்த தந்தையர் தினத்திலாவது அவர் ரசிக்கும் பொழுதுபோக்கு விஷயங்களை நீங்கள் செய்து கொடுக்கலாம்.

**நேரம் செலவிடுங்கள்:** இதுவே அவருக்கு மிகப்பெரிய மகிழ்ச்சியை பெற்றுத் தரும். பரிசுப் பொருட்கள் மூலம் அவரை ஆச்சர்யப்படுத்துவது, வீட்டில் ஸ்பா அமைத்து கொடுப்பது, ஓய்வெடுக்க நேரம் கொடுப்பது, அவரை புத்துணர்ச்சியாக வைக்க பானங்கள் தயாரித்து கொடுப்பது போன்ற பல விஷயங்களை நீங்கள் செய்து கொடுத்து அவரோடு நேரம் செலவிடுங்கள்.

**சர்ப்ரைஸ் பயணம் செல்லலாம்:** அவருக்கு பிடித்த இடங்களுக்கு சாலைப் பயணம் மேற்கொள்ளலாம். அவரை கடற்கரைக்கு அழைத்துச் செல்லலாம். அவருக்கு பிடித்த இசை நிகழ்ச்சிகளுக்கு அழைத்து செல்லலாம். இந்த மகிழ்ச்சியான தருணங்களை உங்கள் கேமராவில் படம் பிடிக்க மறந்து விடாதீர்கள்.

**பரிசளியுங்கள்:** உங்கள் தந்தைக்கு பிடித்தமான நிறத்தில் ஒரு அழகான ஷர்ட், டி-ஷர்ட்டை பரிசளிக்கலாம். உங்கள் தந்தையின் புகைப்படம் அச்சிடப்பட்ட பர்ஸை அவர்களுக்கு நீங்கள் வழங்கலாம்.

**வாழ்த்து அட்டை:** உங்கள் அப்பா மீது எவ்வளவு அன்பு பாசம் வைத்திருக்கிறீர்கள் என்பதை எழுதிய அந்த வாழ்த்து அட்டையை இந்த தந்தையர் தினத்தில் அவருக்கு பரிசாக வழங்கலாம். இது வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத பரிசாக அமையும்.



Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 05 -2024
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

# வாலிபர் எழுப்புதல் கூடுகை 2024



## ஆந்திர பிரதேசம் - குப்பத்தில்...

நாள்: **ஜூன் 16,** ஞாயிற்றுக் கிழமை

நேரம் : மாலை 5 மணி முதல் 8 மணி வரை

இடம்: Christian Minority Hall, M.F.C. College Backside, Kuppam

செய்தியும் ஜெபமும்: **சகோ. சாம் ஜெபராஜ்**

தொடர்புக்கு : 9962085523, 9492381258



## சுரண்டையில்...

நாள்: **ஜூலை 13,** சனிக்கிழமை

நேரம் : காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை

இடம்: சீயோன் வளாகம், சுரண்டை

## வேளச்சேரியில்...

நாள்: **ஜூலை 14,** ஞாயிற்றுக் கிழமை

நேரம் : மாலை 4 மணி முதல் 7 மணி வரை

இடம்: அட்வென்ட் மகா சபை பள்ளி வளாகம், காந்தி சாலை, வேளச்சேரி சென்னை - 41

செய்தியும் ஜெபமும்: **சகோ. அவினாஷ்**

தொடர்புக்கு : 9750955548, 9443962141, 9443971759

தொடர்புக்கு : 9488475315, 9884410258